Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 47
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 15 ஸபரி 1 திங்கட்கிழமை (29-3-71)

இலங்கையின் முதல்தரமான கோப்பி விதைகளினால் தயாரிக்கப்பட்டது
சிப்ஸ் கோப்பி
குடும்ப சிக்கனத்திற்கென ஒரு முத்தல் பக்கட்டுகளில் வெளிவருகிறது.
இன்றே வாங்கி நன்மையடையுங்கள்.
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

## கட்டிடங்களுக்குத் தீ! யந்திர துப்பாக்கிப்பிரயோகம்

# கி. பாகிஸ்தானில் ராணுவம் தரைமட்டமாக்குகின்றது!

## வெளியேற்றப்பட்ட நிருபர்கள் தகவல்

புதுடில்லி, மார்ச் 28 கிழக்கு பாகிஸ்தானில் ராணுவத்தினர் கட்டிடங்களுக்குத் தீ வைத்து தரைமட்டமாக்குகின்றனர் வீடுகளில் ஜன்னல்களுக்கூடாக யந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு பெரும் ஆடசேதம் ஏற்பட்டுள்ளது. பிறநாட்டு நிருபர்களின் ஆடைகள் களையப்பட்டன.

கிழக்கு பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆஸ்திரேலிய நிருபர் தெரிவித்த மேற்படி செய்தியை ஆஸ்திரேலிய ரேடியோ அறிவித்துள்ளது

கிழக்கு பாகிஸ்தானின் தலைநகரான டாக்காவில் துருப்புகள் தொடர்ந்து யந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்தையும் தீவைப்புவேலைகளையும் செய்துவருகின்றன.

பட்டப்பகலில் ஜீப்புகளிலும் மற்றும் இராணுவ வாகனங்களிலுமிருந்து வீடுகளின் திறந்த யன்னல்களுக்கூடாக துப்பாக்கிப்பிரயோகமும் நடைபெறுகிறது துருப்புகளின் தாக்குதலை ஓரளவு தடைசெய்ய மக்கள்செய்த வழியடைப்புகளையெல்லாம் இராணுவம் புல்டோசர்களாலும் ராணுவ லொறிகளாலும் மோதி தகர்த்தெறிந்துள்ளன.

இச்செய்தியை டாக்காவி

(5ம் பக்கம் பார்க்க)

## ஆட்சிமன்ற 7-வது கூட்டத் தொடர் ஆரம்பமானது

கோட்டை, ஞாயிறு இலங்கை ஆட்சிமன்றத்தின் ஏழாவது கூட்டத் தொடர் இன்று ஆடம்பரமற்ற உத்தியோக பூர்வமான வைபவங்களுடன் ஆரம்பமானது. கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ சிங்களத்தில் தமது சிம்மாசனப் பிரசங்க உரை நிகழ்த்தினார். இதனை அடுத்து தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புகள் வாசிக்கப்பட்டன.

இலங்கை சுதந்திரமடைந்த 23 வருடங்களிலும் ஆட்சிமன்ற திறப்புவிழா சாதாரண ஆடம்பரமற்ற முறையில் நடந்தது இதுவே முதல் தடவையாகும். இன்று 2 மணிக்கு இவ்வைபவம் ஆரம்பமானது.

ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசாங்கத்தின் தீர்மானங்கள் சில செனட்சபையில் நிறைவேற்றப்படாததால் செனட்சபையிலுள்ள எதிர்க்கட்சிப் பெரும்பான்மைப் பலத்துக்கு பதிலடி கொடுப்பதற்காகவே பழைய கூட்டத் தொடரைக் கலைத்து புதிய ஆட்சிமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்தது.

செனட்சபை உறுப்பினர்களும், அரசியல் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்

ஆட்சிமன்றம் அடுத்தமாதம் 4-ம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

செனட் தொடக்கத்தின்போது

## எதிர்க்கட்சி செனட்டர்கள் கலந்து கொள்ளவில்லை

கொழும்பு ஞாயிறு ஏழாவது ஆட்சிமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரில் கவர்னர்ஜெனரல் ஆற்றிய உரைக்கு செனட்டில் நன்றிதெரிவிக்கும் பிரேரணை எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது அங்கு கூச்சலும் குழப்படியுமாக இருந்தது.

செனட் ஆரம்பித்த பொழுது எதிர்க்கட்சி செனட்டர்கள் சமூகமளிக்கவில்லை. அவசரகாலநிலைமையை உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாததினாலேயே அவர்கள் கலந்துகொள்ளவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் ஆறு செனட்டர்கள் எழுந்து தமக்குள் ஒருவருக்கொருவர் சவால்விட்டு சத்தம் போட்டனர்.

தலைமைவகித்த உதவித் தலைவர் எஸ் டி எஸ் சோமரத்தின அமைதியை நிலைநாட்டினார்.

கவர்னர் ஜெனரலுக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணையை பிரேரித்து திரு. டபிள்யூ டீ விஜயகுரியா பேசுகையில், அரசாங்கத்தின் சோஷலிசத் திட்டங்களுக்கு செனட் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறதெனக் குற்றஞ்சாட்டிய பொழுது இவ்வாக்குவாதம் ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் ஐ தே கட்சியைச் சேர்ந்த திரு கல்பகே அவசரகால நிலைமை பற்றி விவாதிக்குமுன்பு ஒத்துக்கொண்டுவிட்டு ஆட்சிமன்றக்கூட்டத் தொடரை கலைத்துவிட்டது. ஆகவே இப்பொழுது அதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்றார் ரெஜி பெரேரா கவர்னர் ஜெனரலுக்குஇது அவமதிப்பை ஏற்படுத்துவதாகும்.

கல்பகே: அரசாங்கம் செனட்டை எவ்வளவோ முறை அவமதித்துவிட்டது.

விஜயகுலசூரியா தொடர்ந்து குறுக்கீடு செய்தார். செனட் உட்பட யார் இடையூறுகள் ஏற்படுத்தினாலும் மக்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற அரசாங்கம் எதையும் தாண்டிச் செல்லும் என்றார். (சி பி ஏ)

......

லண்டன், மார்ச் 28 பிரிட்டன் வெளிநாடுகளுக்கு வழங்கும் உதவி நல்ல முறையில் செலவுசெய்யப்படுவதாக பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி ஒன்று லண்டனில் வெளியிட்டுள்ள தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இன்று

யாழ்ப்பாணம். திங்கள் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய 8ந் திருவிழா இன்று நடைபெறும். 'அப்பரும் சம்பந்தரும்' என்ற பிரசங்கமும், திரு பி. சிவசுப்பிரமணியத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும். சுவாமி யானைவாகனத்தில் வீதிவலம்வருவார்.

## புதிய கைலாச வாகனம்

யாழ்ப்பாணம் திங்கள் வண்ணை வைத்தீசுவரன் ஆலயத்துக்கு புதிய கைலாச வாகனம் ஒன்றை யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் உபயஞ் சய்யவுள்ளனர். வாகனவெள்ளோட்டம் நாளை நடைபெறும். புதன்கிழமை சுவாமி கைலாசவாகனத்தில் வீதி வலம் வருவார் இவ்வாகனத்தை வட்டுக்கோட்டை ஸ்தபதியார் திரு. சு வைரவநாதன் செய்துள்ளார்.

## சிறுமி மனோரமா பேசவில்லை!

கொழும்பு, திங்கள் அருச்சுனராஜாவின் கொலை பற்றியோ. திரு நடராஜா பற்றியோ மனோரமா எதுவும் பேசவில்லையென வல்வெட்டித்துறை பொலிசைச் சேர்ந்த திரு. இராஜேந்திரம் கொழும்பில் நடைபெறும் பருத்தித்துறை தேர்தல் ஆட்சேபனை வழக்கின்போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். குறிப்பிட்ட கூட்டத்தில் திரு இராஜேந்திரமே பொலிஸ் [illegible] கவர்.

## பாக் குற்றச்சாட்டுக்கு இந்தியா மறுப்பு

கல்கத்தா, மார்ச் 28 கிழக்குப் பாகிஸ்தானில் சேக் முஜிபுர் ரஹ்மானின் படைகளை அடிபணியச் செய்வதற்காகபாகிஸ்தான் இராணுவம் ரஷ்ய டாங்கிகள் அமெரிக்க ஜெட் சீனாவின் ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக கல்கத்தாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

மேற்கு பாகிஸ்தானியத் துருப்புக்களை கிழக்குப் பாகிஸ்தானிய மக்கள் கடுமையாக எதிர்த்து வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. சிட்டகாங்குக்கு மேலும் துருப்புக்களை விமான மூலம் அரசு அனுப்பி வைத்துள்ளதாக டாக்கா வானொலி அறிவித்தது.

நியூயோர்க் கான்சலகம்

நியூயோர்க்கிலுள்ள பாகிஸ்தான்கான்சலகத்தை அங்கு வேலைசெய்யும் கிழக்குப் பாகிஸ்தானியர் கைப்பற்றியுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நூற்றுக்கு மேற்பட்ட கிழக்குப் பாகிஸ்தானியர் ஐ நா. தலைமை நிலையம் முன் ஆர்ப்பாட்டம்செய்தனர். ஐ. நா. சாசன விதி

(8-ம் பக்கம் பார்க்க)

## உலகப் பத்திரிகைகள் கண்டனம்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாக்கிஸ்தான் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவரிடம் ஆட்சியை ஒப்படைக்க யாஹ்யா முன்வரவில்லை. பாகிஸ்தானுக்கு பிரிட்டன் பலவழிகளிலும் உதவிசெய்துவருகிறது சேக்முஜிபுரின் உயிரின் பாதுகாப்புக்கு பாகிஸ்தான் அரசே பொறுப்பென்பதை பிரிட்டன் மறந்துவிடாதென பிரிட்டனில் இருந்து வெளிவரும் சண்டே எக்ஸ்பிரஸ் எழுதியுள்ளது.

ராணுவ ஆட்சியினால் காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்தி மக்களைக் கட்டுப்படுத்துவது [illegible]. ஆனால் இப்பொழுது காலனி ஆதிக்கம் மௌசு இழந்துவிட்டதென

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 2-30 6-30, 9-45
ரஞ்சன் - ராஜகுமாரி
நடிக்க
சந்திரலேகா

வெஸ்லி சினிமா
சாவகச்சேரி
தினசரி 2 30, 6-30, 9-30
ராஜன் - சௌகார் ஜானகி
நடித்த
துணைவன்

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

இன்னும் சில தினங்களுக்கு மட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
வீட்டுக்கு வீடு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

இன்னும் சில தினங்கள் மட்டும்
கெப்பிட்டல்
(கொழும்பு)
விஜயா
(மட்டக்களப்பு
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


## வெற்றிக்குப் பாராட்டு

பாண்டிருப்பு, ஞாயிறு

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலிலும் லோகசபைத் தேர்தலிலும் தி மு. கழகம் பெற்ற வெற்றியைப் பாராட்டுமுகமாக கல்முனை கன்னித்தமிழியக்கம் பாராட்டுக் கூட்டமொன்றை நடாத்தியது.

இக்கூட்டத்துக்கு இயக்க காப்பாளர் திரு. முருகவேள் தலைமைதாங்கினார். திரு. நோ. மணிவாசகன், திரு. பொ. சிவானந்தம் செல்வி நோ. இராசம்மா திரு. நீ. செல்வராசா ஆகியோர் பேசினர்.

கூட்ட இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி பாராட்டுத் தந்தியொன்றையும் மேற்படிசங்கம் தமிழக முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தது.

...

## உதயசூரியன்

ஊரதீவு, ஞாயிறு

புங்குடுதீவுக் கிராமமுன்னேற்றத்துக்கு உழைப்பதற்கென புங்குடுதீவு ஈஸ்டேர்ன் கிளப் மண்டபத்தில் உதயசூரியன் சமூகசீர்திருத்தக் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. கழகத்தலைவராக ஐ சிவசாமியும், இணைச்செயலாளர்களாக எஸ் செல்வரத்தினம், க குணராசா ஆகியோரும், தனாதிகாரியாக க செல்வரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## வெற்றிதோல்வி இல்லை

பருத்தித்துறை, ஞாயிறு

நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் பன்னிப்பிற்றியா தர்மபால வித்தியாலயத்துக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான கிறிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

ஹாட்லி மைதானத்தில் நடந்த இப் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் ஹாட்லி 163 ஓட்டங்களையும் தர்மபால வித்தியாலயம் 65 ஓட்டங்களையும் பெற்றது. இரண்டாம்நாள் ஆட்டத்தில் ஹாட்லி 9 விக்கெட்டுகளுக்கு 154 ஓட்டங்களையும் தர்மபாலா 8 விக்கெட்டுகளுக்கு 175 ஓட்டங்களையும் பெற்றன. தர்மபாலா கோஷ்டிவீரர் மொறவாக்க 95 ஓட்டங்கள் பெற்று தமது கோஷ்டியை தோல்வியினின்றும் தப்ப வைத்தார். அவரது ஆட்டம் பலராலும் பாராட்டப்பட்டது.

...

## தமிழரசு வட்டுக்கிளை நிர்வாகிகள்

சுழிபுரம், வியா

தமிழ்அரசுக் கட்சி வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் புதிய நிர்வாகிகள் தெரிவு சித்தன்கேணியிலுள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தலைவர் மு. கணபதிப்பிள்ளை உபதலைவர்: இ. மு. அருணாசலம், காரியதரிசி: ச. வி. நடராசா, உபகாரியதரிசி: ப. இராசகுரு, தனாதிகாரி தி. சிவமயம்.

நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## அல்லாரை அம்மன் உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

அல்லாரை தான்தோன்றித் தாளையடிக் கண்ணகை அம்மன் பங்குனித்திங்கள் உற்சவம் அடுத்த மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ளது.

ஜனவரி தீக்குளிப்பு. விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

(ஆ.வி.ம.)

......

## ஒரே மேடையில் இரு நாடகங்கள்

இமையாணன் திங்கள்

இம்மாதம் 31-ம் திகதி மந்திகை அம்மன் ஆலய முன்றலில் இலங்கேஸ்வரன் கலாமன்றம் அளிக்கும் ‘காவியத்தலைவன்’ என்னும் சமூக நாடகமும் ‘தணியாத தாகம்’ என்னும் வரலாற்று நாடகமும் ஒரே மேடையில் நடைபெறவுள்ளன.

இவ்விரு நாடகங்களின் தயாரிப்பு நிர்வாகத்தை திரு ஆ. கு. அருள்தாசன் கவனிக்கிறார்.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30& 4'30.p m.
3S3 PASSPORT TO HELL
(Spy Film)

6-30, 10-00 மணி
ஜெய்சங்கர் - விஜயகுமாரி
நடித்த
ஜீவனாம்சம்

REGAL - Jaffna
Daily 3 shows
Steeve McQueen
Faye Dunaway
in
THE THOMAS
CROWN AFFAIR
Colour]


## வரி விளம்பரம்

### கல்வி

மோட்டார், டிராக்டர், டீசல் மெக்கானிக் டிப்புளோ பயிற்சி வகுப்புகள், ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பமாகவிருக்கின்றன. சேர விரும்புவோர் விபரம் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை நேரிலோ அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க. அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோமொபைல், என்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை, 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2731

### விற்பனைக்கு

நல்லூர் வடக்கில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்பும் முப்பத்தையாயிரம் ஒன்பது பரப்பு இருபத்தேழாயிரம். விலை கேட்கலாம் விபரங்களுக்கு: உரிமையாளர் (தரகரல்ல) 92 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

2733

காணி!

யாழ்ப்பாணநகரிலிருந்து மூன்று மைலுக்குள் உயரப்புலம் - ஆனைக்கோட்டையில், கொக்குவில், குளப்பிட்டி றோட்டிற்கு அருகாமையில் வீடு கட்டக்கூடிய, 170 காய்க்கும் பருவத் தென்னம்பிள்ளைகளுடன் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும், R. பாலசுப்பிரமணியம், புறக்டர், 20, வைமன் வீதி, நல்லூர்.

2735

### தேவை

தேநீர் கடைக்கு அனுபவமுள்ள சமையல் ஆள் தேவை, நேரில் வரவும் மலர் கபே, அச்சுவேலி. (லிபேர்ட்டி தியேட்டருக்கு அருகாமை) 2730

இலற்றிக் வெல்டிங் செய்யும் அனுபவமிக்க ஒருவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். கிருஷ்ணபிள்ளை, மோட்டார் உதிரிப்பாக விற்பனையாளர், 591, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

2736

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 29—3—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344மீ அன் 49 மீ**


பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்சேட்டவை.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 4 45 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஒரு கல்லில் செதுக்கியுள்ள வாக்கியங்கள் ஒரு சிறுவனின வாழ்க்கையில் கண் கூடாகப் பலிக்கும் கதை
வின்ஸர் வெண்திரையில்
திரையிடப்படுகிறது!

தினசரி 4 காட்சிகள்
மாஸ்ரர் பிரபாகர், பேபி சுமதி,
லட்சுமி, மனோரமா,
வி.எஸ்.ராகவன், சுருளிராஜன்,
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
வா ராஜா வா
(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். விவகாரத்தில் இந்தியா தலையிடுவதாக ஆட்சேபம்

## டாக்கா நிலைமை பற்றி முரண்பட்ட செய்திகள்

### 50 நிருபர்கள் வெளியேற்றப்பட்டனர்

புதுடில்லி, மார்ச் 28

தமது உள்நாட்டு விவகாரங்களில் குறுக்கிடுவதாக இந்தியாவிடம் பாகிஸ்தான் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றது.

பாகிஸ்தான் சம்பவங்கள் பற்றி பொய்யும் புளுகுமான செய்திகளை ஒலிபரப்பும் வானொலி சேவையொன்றை கள்ளத்தனமாக இந்தியா நடத்தி வருவதாகவும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் கடும செய்தித் தணிக்கை ஏற்படுத்தப் பட்டிருப்பதால் அங்கு நடைபெறும் சம்பவங்கள் குறித்து முரண்பாடான செய்திகளே வந்து கொண்டிருக்கின்றன.

கிழக்குப் பாகிஸ்தானில் எல்லா கேந்திரஸ்தானங்களும் ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாக பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது. டாக்காவிலும் சல முக்கிய நிலைகளிலும் ராணுவம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டதாகவும் எல்லா இடங்களிலும் மாமூல் நிலைமை திரும்பிக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

டாக்காவிலும் இதரப் பகுதிகளிலும் கடுமையான செய்தித் தணிக்கை அமுலில் இருக்கின்றது. இருந்தும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகளின்படி இன்னமும் தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்து கொண்டேயிருப்பதாகத் தெரிகின்றது: சுமார் 50 வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் டாக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களில் சுமார் 30 பேர் ஓட்டல் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் பின்னர் இவர்கள் கராச்சிக்கு அனுப்பப்பட்டனர் அமெரிக்க பத்திரிகை நிருபர் ஒருவர் டாக்காவிலிருந்து புறப்பட்டு கொழும்பு சென்று அங்கிருந்து தமது பத்திரிகைக்கு செய்திகளை அனுப்பியிருக்கிறார்.

இவர் டாக்கா விமான நிலையத்துக்குப் போன சமயத்தில் டாக்கா பல்கலைக்கழகப் பகுதியில் பெருந்தீ கொழுந்து விட்டு எரிவதை பார்த்ததாகவும் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைக் கேட்டதாகவும் அறிவித்திருக்கிறார்.

தெருக்களில் ஆர்ப்பாட்டங்கள் செய்த மாணவர்கள் மீது இரக்கமின்றி ராணுவத்தினர் சுட்டார்களாம். ஆங்கிலச் செய்தித்தாள் கட்டிடம் ஒன்றின்மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் அந்தக் கட்டிடத்துக்கும் தீவைக்கப்பட்டதாம்.

ராணுவத்தின் கொடும் தாக்குதல்களை முஜிபுர் ரஹ்மான் ஆதரவு மக்கள் துணிச்சலுடன் எதிர்த்து வருகிறார்களாம். ஏற்கனவே சுமார் 10 ஆயிரம் பேரை ராணுவம் சுட்டுத்தள்ளி விட்டதாக முன்வந்த செய்திகள் கூறின.

### அமெரிக்க பத்திரிகை ஆசிரியர் கண்டனம்

டாக்காவிலிருந்து பத்திரிகையாளர்கள் வெளியேற்றப்பட்டதை அமெரிக்க பத்திரிகையொன்றின் ஆசிரியர் கண்டித்திருக்கிறார்.

நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் தமது பத்திரிகை நிருபர்கள் வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து அதிபர் யாஹ்யாக்கானுக்கு அவசரக்கடல் தந்தியொன்றை அனுப்பியிருக்கிறார். இந்த வெளியேற்றம் தேவையற்றது. அர்த்தமற்றது சர்வதேச பத்திரிகை நெறிகளுக்கும் முரண்பட்டது என்று யாஹ்யாக்கானுக்கு அவர் தெரிவித்திருக்கிறார்.

### இந்தியாமீது குற்றச்சாட்டு

பாகிஸ்தான் உள்விவகாரங்களில் தலையிடுவதாக இந்தியாவை பாகிஸ்தான் அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களை இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கண்டித்ததைத் தொடர்ந்து இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கப்பல் ஒன்றில் கள்ள வானொலி நிலையம் ஒன்றை வைத்துக் கொண்டு பாகிஸ்தான் பற்றி பொய்யும் புளுகுமான செய்திகளை ஒலிபரப்ப இந்தியா ஏற்பாடு செய்திருப்பதாகவும், ஹூக்லி ஆற்றில் இந்தக் கப்பல் இருப்பதாகவும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பாகிஸ்தான் பற்றி ஒலிபரப்பிய செய்திகளையும் பாகிஸ்தான் மறுத்திருக்கின்றது.

#### ஜெனரலுக்கு காயமில்லை

பாகிஸ்தான் ராணுவ ஜெனரல் டிக்காகான் காயமடைந்ததாக பி பி ஸி ஒலிபரப்பிய செய்தி தவறானது என்று பாகிஸ்தான் அறிவித்திருக்கின்றது. சண்டைகள் தொடர்ந்து நடப்பதாக் கூறப்பட்டதையும் அது மறுத்துள்ளது

மக்களை அடக்க டாங்கிகள் பயன்படுத்தப்படுவதாக டாக்காவிலுள்ள அமெரிக்க கான்சல ஜெனரல் அறிவித்த வெளிவந்த செய்தியை வாஷிங்டனில் ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

#### முஜிபுர் பற்றிய செய்திகள்

ஷேக் முஜிபுர் ரஹ்மான் அவரது இல்லத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு விட்டதாக பாகிஸ்தான் ரேடியோ செய்தி ஒலிபரப்பியது. ஆனால் இ வெறும் பிரச்சாரமாக இருக்க வேண்டும் என்றும் அவர் சுதந்திரமாகவே இருக்கிறார் என்றும் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த செய்திகள் கூறின. இரகசிய வானொலி ஒன்றின் மூலம் அவர் தமது மக்களுக்கு செய்தியொன்றை ஒலிபரப்பினார் என்றும் கூறப்படுகின்றது.

சகல கேந்திர நிலைகளையும் ராணுவம் தன் கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாகவும், அரசாங்க ஊழியர்கள் தொழில்களுக்குத் திரும்புகிறார்களென்றும் வழமையான நிலைமை வேகமாகத் திரும்பிக்கொண்டிருப்பதாகவும் பாகிஸ்தான்ரேடியோ அறிவித்தது ஆனால் ராணுவ அதிகாரிகள் வெளியிட்டுள்ள புதிய [illegible] பார்த்தால் [illegible] ராணுவத்தை எதிர்த்துப் போராடி வருவதையே காட்டுகிறதென்று இந்தியச் செய்தியொன்று கூறியது

ராணுவ விமானங்கள், வாகனங்கள் போன்றவற்றின்போக்குவரத்துக்களுக்கு மக்கள் பெரும் தடைகளைப் போட்டுசங்கடம் ஏற்படுத்துகிறார்களென்று அச்செய்தி கூறியது. போக்குவரத்துக்களைத் தடைசெய்பவர்கள் மீது கடும் நடவடிக்கையெடுக்கப்படும் என்று புதிதாகச் சட்டம் அறிவிக்கப்பட்டதை அச்செய்தி மேற்கோள் காட்டியிருக்கின்றது.

ஷேக் முஜிபுர் ரஹ்மான்

## 'சுடச்சுட' தகவல்தரும் "கம்பியூட்டர்" கருவி

லண்டன், மார்ச். 28

உலகெங்கும் மோட்டார் வேக ஓட்டப் பந்தயங்கள் நடைபெறுவது யாவரும் அறிந்ததே பந்தயக் கார்கள் வேகமாகச் செல்வதைக் காண, பலமணி நேரம் காத்திருந்து 'ரிக்கெற்' வாங்கிச் செல்வோரின் தொகை மிகவும் பெரிது! ஆனால் தெருவீதிகளிலும், மோட்டார் வேகப் பந்தயம் ஆரம்பிக்கும் திடல்களிலும் நிற்கும் மக்கள் வாகனங்களை அவ்வப்போது, அவை அவர்களைத் தாண்டிச் செல்லும் பொழுது. மட்டுமே கண்டு களிக்கலாமே தவிர பந்தயம் ஆரம்பித்து. முடிவடையும் வரை போட்டியில் நிலவரத்தை அறிந்து கொள்வது முடியாத காரியமாக உள்ளது.

மிக நீண்டதூர மோட்டார் ஓட்டப்பந்தயங்களின் போது இந்த ரசிகர்கள் பாடு பெரும் திண்டாட்டமாகி விடுகிறது! உதாரணமாக அடுத்தமாதம் கிழக்காபிரிக்காவில் நடைபெறவிருக்கும் ஓட்டப்பந்தயத்தில் கார்கள் 3,000 மைல்கள் வரை பிரயாணம் செய்ய வேண்டும். கிட்டத்தட்ட கிழக்காபிரிக்கா முழுவதையுமே கடந்துசெல்ல வேண்டும். ஏகாந்தமான இடங்களைத் தாண்டி. கொண்டும். கரடுமுரடான பாதைகளையும், பல்வேறு காலநிலைகளையும் சமாளித்து செல்ல வேண்டும். இப்படிப்பட்ட நீள்தூரப்போட்டியில் கலந்து கொள்ளும் கார்களின் முன்னேற்றத்தையும், அவற்றின் நிலைகளையும் எப்படி ரசிகர்களும், பத்திரிகை நிருபர்களும் அறிந்து கொள்வது? இழையும் பிழையின்றிய தகவல்களை, 'சுடச்சுட' தம் பத்திரிகைகளுக்குமுதன் முதலாக அனுப்பிவிடவேண்டுமெனத் துடிக்கும் நிருபர்கள் என்ன செய்வது?

இதுகாறும் இருந்து வந்த இப்பிரச்னைகளுக்குப் பதில் தருகிறது ஒன்றப கம்பியூட்டர் சாதனம்! முதலில் வேக ஓட்டப்போட்டியில் கலந்து கொள்ளும் கார்கள் பற்றிய சகல விரிவான தகவல்களையும் இந்தக்கம்பியூட்டர் தன் சக்திவாய்ந்த இயந்திர மூளையில் பதியவைத்துவிடுகிறது. போட்டி ஆரம்பித்து கார்கள் முன்னேறிச் செல்ல ஆங்காங்கே வழி முழுவதும் இருக்கும். போட்டி அதிகாரிகள் அளிக்கும் தகவல்களையெல்லாம் இக்கம்பியூட்டர் பெற்று, தன்னிடமும் முன்னரே இருக்கும் தகவல்களுடன் ஒப்பிட்டு. எந்த எண் கார், எந்த நிலையில் உள்ளது, அதன் நிலையில் அதற்குக் கொடுக்கவேண்டிய புள்ளிகள் எவ்வளவு போன்ற தகவல்களை ஏமமியும் பிசகின்றி விநாடிக்கு விநாடி கொடுத்துக்கொண்டேயிருக்கும்.

அது மட்டுமல்ல. அது கொடுக்கும் தகவல்களைப் பற்றிய விரிவான விளக்கம்

[7ம் பக்கம் பார்க்க]

### அண்ணாசிலை நிறுவமுயற்சி

பாண்டிருப்பு, ஞாயிறு

கல்முனை கன்னித்தமிழியக்கம் கல்முனையில் அண்ணாசிலை நிறுவுவதற்கு எடுத்து வரும் முயற்சிகளுக்கு நிதி உதவிபுரிய அகில இலங்கை தமிழ்த்தாய் மன்றம் முன்வந்திருக்கின்றது. பல கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் நிதியைச் சேகரிக்க மன்றம் முடிவுசெய்துள்ளது.

## மக்களை தவறாக வழிநடத்திஞராம்

### பூட்டோ சொல்கிறார்

கிழக்குப்பாகிஸ்தான் மக்களைத் தவறாக வழிநடத்தினார் என்று ஷேக்முஜிபுர் ரஹ்மானை மக்கள்கட்சித்தலைவர் சுல்பிகார் அலி பூட்டோ குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

பூட்டோவின் கருத்தினை பாகிஸ்தான் வானொலி இன்று ஒலிபரப்பியது

பாகிஸ்தானுக்கு இரண்டு ஆட்பீடங்களையும் இரண்டு அரசியல் திட்டங்களையும் அவர் கோரியதாக பூட்டோ கூறியிருக்கிறார்.

காயிதேஆஸம் ஜின்னாவை ஷேக் முஜிபுர் ரஹ்மானின் [illegible] இழிவுபடுத்தினார்கள் என்றும் தேசியக் கொடியைக் கீழேபோட்டு மிதித்துவிட்டு பங்காள தேசக்கொடியைப் பறக்கவிட்டார்களென்றும் பூட்டோ குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

#### ஜெயப்பிரகாஷ் கருத்து

பாகிஸ்தான் இரண்டாகப் பிரிந்துபோவதைத் தடுக்க முயற்சிசெய்வதாக நினைத்துக்கொண்டு ஜெனரல் யாஹ்யாகான் நடவடிக்கை எடுத்து வருகிறார் ஆனால் அவரது நடவடிக்கைகள் [illegible] இரண்டாகப்பிரிந்துபோவதற்கே வழிவகுப்பவையாக இருக்கின்றன என்று இந்தியத் தலைவர்களில் ஒருவரான திரு. ஜெயப்பிரகாஷ்நாராயணன் கூறியிருக்கிறார்.


## 'சோவியத் நாடு'

★ சோவியத்-ஈழத்து மக்களின் நட்புறவின் குரல் "சோவியத் நாடு"

'சோவியத்நாடு' வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



'சோவியத்நாடு' வாசியுங்கள்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்.

27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஓடம் ஓடுவதற்கு நீர் தேவையே நீர் இல்லாமல் ஓடமில்லை. ஆனால் ஓடத்துக்கு ஆதாரமான நீர் ஓடத்துக்கு வெளியே இருக்க வேண்டுமே அல்லாது அதற்கு உள்ளே அல்ல சமூகத்தின் செல்வமும் இத்தகையதே செல்வம் ஒவ்வொருவர் வீட்டிலும் உள்ளே புகுந்துவிடாமல் சமூக ஓடத்துக்கு வெளியில், அது மிதப்பதற்கு ஆதாரமாய் அமையவேண்டும். — வினோபாவே,

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 15ந் திகதி ( 29 - 3 - 71)

# இலங்கையின் கடமை

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்கள் திடுக்கிடச் செய்வதுடன் கவலையளிப்பதாயுமுள்ளன. மூன்று பெரும் தலைவர்களும் டாக்காவில் கூடி ஒரு சமரச ஏற்பாட்டுக்கு வந்துள்ளதாக முதல்நாள் அறிவிக்கப்பட்டபோது ஆறுதலாக இருந்தது ஆனால் மறுநாளே பேச்சுக்கள் முறிந்து விட்டதாகவும் உள்நாட்டுச் சண்டை நடைபெறுவதாகவும் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த துருப்புகளுக்கும் கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கும் போர் நடப்பதாகவும் உயிர்ச்சேதம் ஏராளமாக இருப்பதாகவும் கிடைத்த செய்திகள் திடுக்கிடச் செய்தன.

நிமிடத்திற்கு நிமிடம் நிலைமை மாறி வருவதாகச் செய்திகளிக்கப்படுகின்றன உண்மை நிலைமை தெளிவாகத் தெரியவில்லை. இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் நிலைமை அடங்கி இருப்பதாகவும் ஊரடங்குச் சட்டம் சில நேரத்துக்கு தளர்த்தப்பட்டுள்ளதென்றும் பாகிஸ்தான் ரேடியோ தெரிவிக்கின்றது பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து பொதுமக்களின் கைக்கு அதிகாரத்தை மாற்ற வேண்டுமென்ற மேலான ஜனநாயக நோக்கத்துடன் ஜனாதிபதி யாஹ்யாகான் பொதுத் தேர்தலை நேர்மையாகவும் அமைதியாகவும் நடத்தி புதிய அரசியல் நிர்ணய சபைக்கு முன் ஏற்பாடுகள் செய்தார் ஆனால் கிழக்கு மேற்குப் பாகிஸ்தான் அரசியல் கட்சித் தலைவர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டது.

அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் கிழக்குப் பாகிஸ்தானுக்கு சுயாட்சி அளிக்கவேண்டுமென்றுவற்புறுத்தினார் சென்றபொதுத் தேர்தலில இந்த கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டுப் பெரும் வெற்றிபெற்றார் ஆனால் மேற்குப் பாகிஸ்தானில் அதிக ஸ்தானங்களைப்பெற்ற மக்கள் கட்சித் தலைவரான பூட்டோ அந்தச் சுயாட்சிக் கோரிக்கையையும் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் நிபந்தனைகளையும் ஒப்பவில்லை ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு இந்நிலை திகைப்பளித்ததில் வியப்பில்லை இரு கட்சித் தலைவர்களிடையே ஒரு சமரசம் ஏற்படுத்த டாக்காவுக்குச் சென்று முயற்சி செய்தார். இதற்கிடையே கிழக்குப் பாகிஸ்தான் மக்களிடையே பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. அங்கு நடைபெற்ற சில சம்பவங்கள் ஜனாதிபதிக்கு ஆத்திரமூட்டின. அதனால் பேச்சுகள் முறிந்து அவர் மேற்குப் பாகிஸ்தானுக்குத் திரும்பி அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து அவாமி லீக்கை சட்டவிரோதமாக்கியுள்ளார். இராணுவ பலத்தால் கிழக்குப் பாகிஸ்தான் கிளர்ச்சியை அடக்க முற்பட்டுள்ளார்.

மக்களின் கைக்கு அதிகாரத்தை மாற்ற விரும்பிய ஒருவர் பொதுத்தேர்தல் நடத்தியபின் அதில் பெருவெற்றிபெற்ற ஒரு கட்சியை சட்டவிரோதமாக்க நேரிட்டதும் இராணுவத்தைக் கொண்டு மக்களின் கிளர்ச்சியை அடக்கவேண்டி ஏற்பட்டுள்ளதும் அவருக்கு பெரும் ஏமாற்றமும் வேதனையும் ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள முக்கியமான அரசியல் பிரச்னையை அரசியல் முறையிலேதான் திருப்திகரமாகத் தீர்க்க முடியும். இராணுவ பலத்தால் அல்ல. நிலைமை சீராகும் வரை ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க ஜனாதிபதி யாஹ்யாகான் முன்வரவேண்டும் அவர் எவ்வளவு சிரமப்பட்டு இதற்கு ஒருவகையில் அவ்வாறு முயற்சிக்க அவர் நலம் பெறவேண்டும்.

இது பாகிஸ்தானின் உள்நாட்டு விஷயம்தான் என்றாலும் இலங்கை முஸ்லிம் நாடுகளுக்கு இதில் விசேஷ அக்கறையும் பொறுப்புமுண்டு கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசியல்பிரச்னையை சுமுகமாகத் தீர்க்கவும் அங்கு எரியும் தீயை அணைத்து அமைதி ஏற்படுத்தவும் இலங்கை அரசாங்கம் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்ய முன்வரவேண்டும். அந்த முயற்சி வீண்போக முடியாது, அங்கு அமைதியையும் சமரசத்தையும் ஏற்படுத்துவதின்மூலம் இலங்கை தனக்குத்தானே நன்மை செய்துகொண்டதுமாகும்.

# கூட்டுறவு புதிய கணக்கு முறை பற்றி பயிற்சி

அம்பன் ஞாயிறு

மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் இயங்கவிருக்கும் ஆரம்பச் சங்கங்களில் பணிபுரியவிருக்கும் ஊழியர்களுக்குக் கூட்டுறவுத் தணைக்களம் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையுடன் சேர்ந்து புதிய கணக்கு முறை பற்றிய பலபயிற்சிவகுப்புகளை நடாத்திவருகிறது பளை, பண்டத்தரிப்பு, பூநகரி, கைதடி ஆகிய இடங்களில் மேற்படி வகுப்புகள் நடாத்தப்பெற்றன மேலும் இவ்வகுப்புகளை வடபகுதியில் நடாத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இவ்வகுப்புகளில் கலந்துகொண்டு ஒத்தாசை புரிந்துவரும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை நிர்வாகக் காரியதரிசி திரு. பொ. செல்வரத்தினம் புதிய ஆரம்ப சங்கங்களின் வெற்றி ஊழியர்களிலேயே தங்கியிருக்கிறது. ஆதலால் புதிய கணக்குமுறை பற்றி நன்கு அறிந்துகொண்டு பணியை நேர்மையுடனும், திறமையுடனும் ஆற்ற வேண்டுமென அவர்களிடைய பிரசங்கையில் குறிப்பிட்டார்.

## பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப வழக்கு

# தமிழரசுக் கட்சிக்கு செல்வாக்கு கூடியிருக்கிறதாம்! - கோர்ட்டில் துரைரத்தினம்

பருத்தித்துறை தேர்தல் ஆட்சேபனை வழக்கு விசாரணை இன்று காலை 9-30 மணிக்கு, நீதியரசர் திரு எஸ் ஆர் விஜயதிலகா முன்னிலையில் ஆரம்பமாகிய போது, வல்வெட்டித்துறை பொலிசைச்சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் லக்ஷ்மன் சிறிவர்த்தனவும், முதலாவது எதிர் மனுதாரரான பருத்தித்துறை எம் பி திரு கே துரைரத்தினமும் சாட்சியமளித்தனர்.

சப்இன்ஸ்பெக்டர் திரு. லக்ஷ்மன்சிறிவர்த்தன தனது சாட்சியத்தின்போது கூறியதாவது:

மேமாதம் 9-ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அசம்பாவிதம் ஏதும் நிகழாமல் தடுக்கும் பொருட்டு காங்கேசன் துறையிலிருந்தும் மேலதிகப் பொலிசார் அழைக்கப்பட்டனர். நானும் 16 கான்ஸ்டபிள்களுடன் அக்கூட்டத்துக்குச் சென்றேன் கூட்டத்தில் பேசியவைகளைக் குறிப்பெடுக்கும் பொறுப்பு காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த துப்பறியும் பிரிவைச் சேர்ந்த திரு பாலேந்திரம் என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. எனக்குத் தமிழ்தெரியாத ஆகையால் இரண்டாவது எதிர்மனுதாரரான செல்வி மனோரமா என்ன பேசினார் என்பதை விளங்கிக் கொள்ளவில்லை.

திரு நடராசா பிரபலமான வழக்கறிஞராகையால் அவரை நன்கறிவேன்; கூட்டத்திற்கு அடுத்தநாள் அவர் என்னைச் சந்தித்து செல்வி மனோரமாவின் பேச்சுக்குறித்து கேட்டபோது 'அவர் என்ன பேசினார் என்பது எனக்குவிளங்கவில்லை' என்பதையே அவரிடமும் தெரிவித்தேன்.

இதன்பின்னர் முதலாவது எதிர்மனுதாரரான திரு கே துரைரத்தினம் சாட்சியமளித்தார். அவரது வழக்கறிஞரான திரு என் சத்தியேந்திராவின் கேள்விகளுக்குப் பதிலளித்து அவர்கூறியதாவது:

''காலஞ்சென்ற அர்ச்சுனராசாவை பலவருடங்களாக எனக்குத்தெரியும். தமிழரசுக்கட்சிக்கூட்டங்கள் நடக்கும் போதெல்லாம் மேடை அலங்காரத்தையும், ஒழுங்குகளையும் அவர் முன்னின்று கவனிப்பார் என் கட்சியின் சின்னமான வீட்டை ஊர்வலங்களில் இழுத்துச்செல்ல அலங்காரமாகச் செய்துதருவார்.

1970 மே மாதத் தேர்தலின் போது சுமார் 25 கூட்டங்கள் வரை நடத்தினேன். ஏப்ரல்மாதம் 22-ம் திகதி, பருத்தித்துறையில் நடந்த கூட்டம் ''அர்ச்சுனராசா அரங்கு'' என்று பெயரிடப்பட்ட மேடையில் நடைபெற்றது.

1970-ம் ஆண்டுவரை எனது சமூகமான கரவா சமூகத்தைச் சேர்ந்த திரு நடராசாதான் உள்ளூராட்சி மன்றத்தலைவராக இருந்தார். 1970-ல் கொவியர் சமூகத்தைச் சேர்ந்த திரு தர்மலிங்கம் தலைவரானார் மேமாதத்தேர்தல் உள்ளூராட்சி மன்றத்தின் சீர்கேடான நிர்வாகம் பெரிய முக்கிய பிரச்னையாக இருந்தது.

**சாதிப்பிரச்னை**

1970-ம் ஆண்டுவரையும் எனது சமூகமான [illegible] தலைமைப் பதவி பிறசமூகத்தவர் ஒருவரிடம் போக நான் தான் காரணமாக இருந்தேன் என்ற மறைமுகப் பிரசாரத்தை அரசியல் ரீதியாக முறியடிக்கவேண்டிய-விளக்கம் சொல்லவேண்டிய நிலை எனக்கு இருந்தது

நீதியரசர்: வடபகுதியிலே சாதிப்பிரச்னை இன்னும் கூடிக்கொண்டுதான் இருக்கிறதா? குறைந்துகொண்டு போகிறதா?

துரைரத்தினம்: இப்பொழுது குறைந்திருக்கிறது; ஆனால் தேர்தல்காலங்களில் மீண்டும் தலை தூக்கும்! (சிரிப்பு)

மேமாதம் 9-ம்திகதி கூட்டத்தில் சுமார் 4000 பேர் வரைவந்திருப்பார்கள் திரு. ஞானமூர்த்தி தலைமைவகித்த இந்தக் கூட்டத்தில் முதலாவது பேச்சாளராக திரு. அந்தனிசில் பேசினார்.

செல்வி மனோரமாவும் இந்தக் கூட்டத்தில் பேசினார் அவர் அந்தக் கூட்டத்தில் பேசிய வார்த்தைகள் பின்வருமாறு: நான் கொலையுண்ட அர்ச்சுனராசாவின் மூத்த மகள்; எனது தந்தை ஒரு தமிழரசுக்கட்சி ஊழியன் அவர் இருந்திருந்தால் தமிழரசுக்கட்சியை ஆதரித்திருப்பார். இன்று நீங்கள் தமிழரசுக்கட்சியை ஆதரித்து அண்ணன் துரைரத்தினத்துக்கு உங்கள் வாக்குகளைப் போடுங்கள்'

நீதியரசர்: மனோரமாவின் பேச்சின்போது நடராஜாவைப்பற்றி ஏதேனும் சொன்னாரா?

துரை: ஒன்றுமே சொல்லவில்லை பிரபு.

வழக்கறிஞர்: இந்தக் கொலையைச் செய்வித்தவர் நடராஜா என்ற பொருள்பட மனோரமா பேசியதாகச் சொல்வது சரியா?

துரை: இல்லை மனோரமா அப்படிப்பேசவில்லை.

திரு. துரைரத்தினம் தொடர்ந்து கூறியதாவது: திரு: நடராஜாவைப்பற்றி எதுவுமே பேசப்படவில்லை. தேர்தல் சட்டத்துக்கு முரணான பேச்சுக்களைப்பேச நான் அனுமதித்திருக்கமாட்டேன் செல்வி மனோரமா தான் கொண்டுவந்த கடதாசியொன்றிலிருந்துதான் அவரது பேச்சை வாசித்தார் அந்தக் கடதாசியை நான் கொடுக்கவில்லை பேசும்போது சற்று நடுங்கினார்; திக்கினார்; என்றாலும் பேச்சு தடைப்படவில்லை.

நீதி: நடராஜாவைப்பற்றி எதுவுமே பேசப்படவில்லை; அவர் பெயர் அடிபடவில்லை என்று திட்டவட்டமாகக் கூறுகிறீரா?

துரை ஆம் அவர் பெயர் அடிபடவே இல்லை.

நீதி: மனோரமா பேசி முடித்தபின் கூட்டத்தில் அதன் பிரதிபலிப்பு எப்படியிருந்தது.

துரை: விசேஷமாக ஒன்றுமிருக்கவில்லை.

நீதி: மனோரமா பேசிய பின் மேடையைவிட்டு எப்படி இறங்கினார்? அவர் இறங்கிப்போக நீர் உதவி செய்தீரா?

துரை: தானாகவே படிவழியே இறங்கிப்போனார். நான் உதவிசெய்யவே இல்லை.

நீதி: மனோரமா பேசிய தமிழ் வார்த்தைகள் 'நடராஜா' என்ற சொல்லோடு ஒப்பிட்டு சொல்லக்கூடிய அதே சப்தத்தோடு கூடிய சொல் ஏதுமிருந்ததா?

துரை: [illegible] அல்லவே இல்லை.

நீதி: மனோரமா வாசித்த அந்தக்கடதாசியை அவருக்குக் கொடுத்தது யார் என்று தெரியுமா?

துரை: தெரியாதுபிரபோ

தொடர்ந்து துரைரத்தினம் கூறியதாவது: நானும் இந்தக்கூட்டத்தில் பேசினேன் நான் பேசியபோது, நாராயணசாமி என்ற இளைஞன் மேடை மீதேறி 'கொல்லலையோ சேர்மக்கினாய்?' என்று சத்தமிட்டார். அவர் என்னைத் தொடவுமில்லை எனது சட்டையைப்பிடிக்கவுமில்லை அப்படி அவர் ஏதாவது செய்திருந்தால் பெருங் கலகம் ஏற்பட்டிருக்கும் கூட்டத்தினர் எழுந்து நிற்கவும் குழப்பகரமான சூழ்நிலை ஏற்பட்டது. பொலிசார் வந்து அந்நபரை அப்புறப்படுத்தினர்.

மனுதாரரானதிருநாவுக்கரசை எனக்கு 20 வருடகாலமாகத் தெரியும் அவர் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தீவிர ஆதரவாளர். மேமாதம் 9ம் திகதிக் கூட்டத்தில் திருநாவுக்கரசையோ, துரைச்சாமியையோ நான் மேடைக்கருகில் 15 யார் தொலைவுக்குள் காணவில்லை

மனுதாரரான திரு ஆ திருநாவுக்கரசுவின் வழக்கறிஞரான திரு கே சி நடராசாவின் குறுக்குவிசாரணைக்கு திரு துரைரத்தினம் பதிலளித்துக் கூறியதாவது

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக்கட்சி எல்லாத் தொகுதியிலும் வேட்பாளர்களை நிறுத்திய போதும் மன்னாரைத் தவிர்த்த ஏனைய தொகுதிகள் எல்லாவற்றிலும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரும் போட்டியிட்டனரா?

ப: ஆமாம்

**தமிழரசுசெல்வாக்குக் குறையவில்லை**

கே; தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது தமிழரசுக் கட்சியின் செல்வாக்குக்குறைந்துவிட்டதாகத் தெரிகிறதல்லவா?

ப: இல்லை முன்னிலும் பார்க்கஒரு ஸ்தானம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது தமிழரசுக் கட்சிக்கு

கே: நல்லூர் தொகுதியில் நாகநாதன் தோற்கவில்லையா?

ப: தோற்றார். அவரை எதிர்த்து 7 முறை போட்டியிட்டுத் தோல்வியடைந்தவரிடம்.

வழக்கறிஞர்: ரொபர்ட் புரூஸ்கூட 7 முறையின் பின்னர்தான் வெற்றிபெற்றார்! அதிருக்கட்டும், வட்டுக்கோட்டையில் உங்கள் பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம் தோற்கவில்லையா? வட்டுக்கோட்டை தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் 7 முறை போட்டியிடாதவர்; முதல் முறை போட்டியிட்டவரே.

ப: அங்கே அவர் தோற்றதற்குக் காரணம் காரைநகரிலிருந்த சில சக்திகளுக்கு நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகியது பிடிக்கவில்லை

தொடர்ந்து சாவகச்சேரி உடுவில், காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளில் தமிழரசுக்கட்சியினர் குறைந்தளவு பெரும்பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றதையும், உடுப்பிட்டி,வவனியா ஆகிய தொகுதிகளில் தமிழரசுக் கட்சி முதன் முறையாக வெற்றி பெற்றுள்ளதையும் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டு பதிலளிக்கப்பட்டன.

கே: சென்ற பொதுத் தேர்தலிலே பல்கலைக் கழகப் பிரச்னை பெரும்பிரச்னையாக இருந்ததா?

ப: பெரும் பிரச்னையாக இருந்தது என்று சொல்ல முடியாது பல பிரச்னைகளில் இதுவுமொன்று.

கே: பல்கலைக்கழகம் எங்கே நிறுவப்படவேண்டும் என்பதுதானே பிரச்னை

ப: இந்துப் பல்கலைக்கழகமா தமிழ்ப்பல்கலைக்கழகமா என்பது ஒன்று. பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்திலா திருக்கோணமலையிலா என்பது மற்றொன்று.

கே: எல்லாக் கூட்டங்களிலும் பல்கலைக்கழக விடயம் பற்றி பேசப்பட்டதுதானே?

ப: எல்லாக் கூட்டங்களிலும் பேசப்பட்டதாக சொல்ல முடியாது; சில இடங்களில் பல்கலைக்கழக விஷயங்கள் பற்றி பேசினால் விளங்கிக் கொள்ளமாட்டார்கள் அப்படியான பகுதிகளில் அவர்களுக்குரிய பிரச்னைகள்தான் பேசப்பட்டன.

கே: வல்வெட்டித்துறை பகுதியில் உமது செல்வாக்கு குறைந்துவிட்டதல்லவா?

ப: கீழ்மட்டத்திலுள்ள மக்கள் மத்தியிலே எனக்கு எப்பொழுதும் நல்ல செல்வாக்கு இருக்கிறது. சிறுபான்மை மக்களும் சாதாரண ஏழை மக்களும் என்னையே ஆதரித்தனர்.

கே: 1965 தேர்தலில் உமது பெரும்பான்மை வாக்கு 950.

ப: ஆம்

கே: 1970-ல் அதே வேட்பாளரிடம் 315 வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளீரல்லவா?

ப: ஒருசிறு வித்தியாசம். 1965-ல 3-ம் முறையாகப் போட்டியிட்டார்; 1970-ல் 4-ம் முறையாகப் போட்டியிட்டார்.

கே: 1965லும் பார்க்க 1970-ல் முன்னேறிவிட்டாரல்லவா?

ப: மும்முனைகளில் நான் வேலை செய்யவேண்டியிருந்தது. என்னுடையகிராமத்திலிருந்து ஒருவரும் எனது மனைவியின் கிராமமான வல்வெட்டித்துறையிலிருந்து இன்னொருவரும், திரு. நடராஜாவும் போட்டியிட்டனர் எனவே நான் முழுக் கவனத்துடன் வேலை செய்யவேண்டியிருந்தது.

தொடர்ந்து திரு. துரைரத்தினம் பதிலளிக்கையில் கூறியதாவது; 1952 ம் ஆண்டில் நான் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரான திரு. நல்லையாவுக்கு ஆதரவாகவும், அப்போது அங்கு போட்டியிட்ட திரு. கே. சி. நடராஜாவுக்கு (வழக்கறிஞர்) எதிராகவும் வேலை செய்தேன். (திரு துரைரத்தினத்தைக் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்த வழக்கறிஞரே கே சி. நடராஜா ஆகையால் இதனைச் சொன்னவுடன் நீதிமன்றத்தில் குழுமியிருந்த வழக்கறிஞர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.) 1956-ல் அதே நல்லையாவுடன் போட்டியிட்டு வெற்றிபெற்றேன். நான் இடதுசாரி மனப்பான்மையுள்ளவன்- கூட்டணிக்கு ஆதரவான எண்ணமுடையவன் என்பதை பருத்தித்துறைப்பகுதியும் பாராளுமன்ற வட்டாரமும் நன்கறியும்''

கரவா சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பதவியிலிருந்து இறக்கப்பட்டார் என்பதுதான் சிலருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலில்கிடைத்த வெற்றிக்கு
## அம்பாளுக்கு இன்று காணிக்கை

பார்க்குமிட மெல்லாம் பசுமை, நெஞ்சையும் கண்ணையும் நிறைக்கும் அழகுக் காட்சி உணவுத் தானியங்கள் உள்ளம் பூரிக்க ஒன்றோடொன்று ஒன்றி உறவாடி சதிராடும் கலைவப்பயிர் காட்சி உழைப்பின் அறுவடையாளர்கள் உழைப்பில் மலர்ந்த மணிகளை ஆனந்தத்தோடும் சேகரித்துக் கொண்டிருப்பார்கள்.

வயலில் கிடைத்த வெற்றியை பெரிய விழாவாகக் கொண்டாட உழவர் கூட்டம் பொங்கல் பானைகளுடன் உலகநாயகியான அகிலாண்டேஸ்வரி மனோன்மணி அம்பாள் திருத்தலத்தை இன்று நோக்கி வந்துகொண்டிருக்கும் காட்சி கண்ணிறைந்த காட்சியாகவே இருக்கும்.

யாழ்-கண்டிப் பிரதான வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து சுமார் ஐந்துகல் தூரத்தில் பூநகரிப்பாதையில் குஞ்சுப்பரந்தனில் அருள்பாலித்தெழுந்தருளியிருக்கும் பொறிக்கடவை அம்பாள் ஆலயத்தில் இன்று இத்திருவிழாவைக் காணலாம். நெய்யும், பாலும், தயிரும் கொண்டு சரைச்சியரும் குறிக்கமக்காரர்களும் இப்பகுதியில் பல தொழில்களுக்குரியவர் கூடியேற்றவர்களும் அன்னையை வழிபட ஆவலாக வந்து கொண்டேயிருப்பார்கள். நன்றிக்காணிக்கையாக தமக்கு இயன்றதெல்லாம் அவர்கள் தாயின் பாதக்கமலத்தில் சமர்ப்பிப்பார்கள். குதூகலமான ஆனந்தவழிபாடுதான அடியார்கூட்டம் இந்த ஆலயத்தை நோக்கி எங்கெல்லாமே இருந்து வரும்.

அம்பாளின் அருள் தெரிந்த பலர் இப்போது அவள் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தை புனருத்தாரணம் செய்யத் தீர்மானித்து ஆனமுயற்சி மேற்கொண்டுள்ளார்கள். பெரியபரந்தன், குஞ்சுப்பரந்தன், உருத்திரபுரம் குடியேற்ற மக்கள் ஒன்றுசேர்ந்து இத்திருப்பணிக்கான நிதியை சேகரிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

—கு. வி. மகாலிங்கம்

# 'கூட்டுப்பண்ணை முறையினால் விவசாயிகள் பயன் அடைவர்'

அராலி, ஞாயிறு

விவசாயத்தை நம்பி வாழும் இப்பகுதி மக்கள் நிலத்திலிருந்து கூடுதலான விளைவைப் பெற்றாலன்றி அவர்களின் வாழ்க்கை வளமற்றதாகி விடும். நிதியின்மை, வேலையாள் கிடையாமை போன்ற காரணங்களுக்காக பலர் பயிர்ச்செய்கையில் நிலத்தை பசளை ஊட்டி வளமாக்கல், வரம்பு கட்டல், உழுதல், களை கட்டல் போன்ற பல செய்முறைகளை கைவிடுகிறார்கள். அதனால் விளைவும் குன்றிவருகிறது இப்படியான காரணங்களுக்காக இப்பகுதிப் பயிர்ச்செய்கைக் குழுக்கள் இப்பொழுது தயாரித்த கூட்டுப்பண்ணை முறையை நீங்கள் ஏற்று அதன்படி நடப்பீர்களானால் நீங்களும் நன்மையடைவீர்கள். பயிர்ச்செய்கைக் குழுக்களும் தம் கடமைகளை விவசாயிகளுக்கு செய்வதாகும்.

இவ்வாறு அராலி இ. ச. கட்டிடத்தில் நடைபெற்ற அராலி கிராம அபிவிருத்திக் குழுவின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வலி மேற்கு காரியாதிகாரி திரு. மா. நடராசா கூறினார்.

சணல் கும்பிலிருந்து கயிறு திரித்தல், உடைகள் தயாரித்தல், கோழிப்பண்ணை, சுண்ணும்பு தயாரித்தல் போன்ற கைத்தொழில்கள் மூலம் அராலிக் கிராமத்தில் 100 வாலிபருக்கேனும் உடனடியாக வேலை வாய்ப்பளிக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

— —

## மருதடிவிநாயகர்

# உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய்-மருதடிவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று பகல் 12-50 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 14ந் திகதி புதுவருட தினத்தன்று ரதோற்சவமும் அடுத்தநாள் பிற்பகல் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

முக்கியமானதாகத் தெரிந்ததே தவிர, நான் அதற்குக் காரணமானவராக இருந்தது என்பதல்ல முக்கியமாகத் தெரிந்தது- இப்படியான துஷ்பிரச்சாரங்களை ஒரு பகுதி மக்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள் என்பது உண்மைதான். வெளிப்படையாக இப்படிப் பிரச்சாரம் செய்யாவிட்டாலும் மறைமுகமாகச் செய்தார்கள் எனவே அதனை மறுத்து உண்மையை விளக்கவேண்டியபொறுப்பு எனக்கிருந்தது.

வல்வெட்டித்துறை 90 சதவிகித கரவா சமூகத்தினர் வாழும் ஊராகும் தமிழ்க்காங்கிரஸை ஆதரிப்பவர்களும் அங்கு இருக்கிறார்கள்.

தொடர்ந்து ஜூறிக்கு விசாரணை நடைபெறுகிறது.

# நாட்டுப்பற்றுடன் செயலாற்றுங்கள்

## தொழில் அமைச்சர்

கோட்டை, ஞாயிறு

அரசாங்கம் மக்களின் தேவைகளை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் பொருட்டே தேசிய பொருளாதார தொழில் வாய்ப்பு திட்டங்களை வகுத்துள்ளது இத்திட்டங்களைச் செயற்படுத்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் நாட்டுப்பற்றுடனும் உற்சாகத்துடனும் செயலாற்ற வேண்டும் எம் தாய்நாட்டில் வாழும் சந்ததியினருக்கும் வரப்போகும் சந்ததியினரினதும் நன்மைகளுக்கு கடுமையாக செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது.

இவ்வாறு தொழில் அமைச்சர் திரு. எம். டி. சற். சிறிவர்த்தனு பத்தடுவனவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் புதியசேவை ஒன்றை ஆரம்பித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது: சோஷலிசத்திற்கு எதிராக சிலர் எடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம்முறியடிக்கும் நாட்டிலுள்ள பிரச்சினைகளை அரசாங்கம் தனித்துததீர்வு காணமுடியாது மக்களினது ஒற்றுமை இதற்குத் தீர்வு காணத் தேவையானது நாட்டின் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண அரசாங்கம் மேலும் திட்டங்களை வகுக்கிறது பொருளாதாரவிடய சத்திற்கான திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் பொதுமக்கள்

## நூல் விமர்சனம்
# இராசி பலன்

எழுதியவர்: ஆயர்பாடி சோதிடர் வே. த. மயில்வாகனம்.

வெளியீடு: ஆயர்பாடி சோதிட நிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

தனித்தனி ஒவ்வொரு இராசிபலன் விலை: 1-20.

விதியின் போக்கை உள்ளவாறுரைக்கும் சோதிடக்கலை இன்றைய விஞ்ஞான உலகிலும் மனித மனதை ஈர்ப்பதாகவுள்ளது நம்பிக்கையின் பேருக மனித இதயங்கள் விதியின் செயலை அறியும் ஆவலில் சோதிடக்கலையை நாடி வருவது கண்கூடு.

ஆனால் இதனைச் சரியாகவும் கேட்பவரின் கடந்த நிகழ்ச்சியுடன் பொருத்தி எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டக்கூடியவாறு உரைக்கும் சோதிடங்களுள் முன்னணியில் திகழும் ஆயர்பாடி சோதிடர் திரு. வே. த. மயில்வாகனம் இராசிப் பலன் என்ற பொதுத் தலைப்பில் தனித்தனியே மேடம் தொடக்கம் மீனம் வரையான பன்னிரண்டு இராசிகளையும் தனித்தனி நூலாக வெளியிட்டுள்ளார்.

ஒவ்வொரு இராசிக்குரியவரினதும் பொதுப்படையான பலனுடன் இந்த ஆண்டுக்குரிய பன்னிரண்டு மாதங்களுக்குரிய பலனும் தெளிவாக இந்த இராசி பலன் நூல்களில் விளக்கப்பட்டுள்ளது.

தெளிவான உரையில் அமைந்துள்ள இந்நூலில் வரைபடத்திலே கிரகநிலைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

தனித்தனிக் கிரக பலன்கள், ஏழரைச்சனி, அட்டமச்சனி, குருசந்திரயோகம், கேசரியோகம், சகடயோகம், வியாழசுகம், கோசரபலனும் விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சொல்லப்புகின் ஒவ்வொரு இராசியில் பிறந்தவரும் ஒரு வருடத்துக்குரியதாக தமது பலனை நிர்ணயஞ்செய்துகொள்வதற்கு இந்நூல்கள் வழி வகுக்கின்றன. (இ. நா.)

......

## உலகப் பத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டே டெலிகிராப் எழுதியுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் அரசின் வன்முறைச் செயல்களை நேபாளப் பத்திரிகைகள் மிகவும் கடுமையாகக் கண்டித்துள்ளன, நேபாளத்திலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடான 'ரைசிங் நேபாள்' கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அரசே பொறுப்பு ஆனல் இராணுவ அதிகாரத்தினுல் மக்களின் எழுச்சியினை அடக்கிவிட நினைத்தால் அது தோல்வியிலேயே முடியும் என்று எழுதியுள்ளது

டோக்கியோ பத்திரிகைகள் யாவும் கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து செய்திகளை வெளியிட்டுள்ளன.

...—

# மறைவு

சென்னை, மார்ச், 28

தமிழகத்தின் சஞ்சிகைகளான பிரசண்டவிகடன், ஆனந்தபோதினி ஆகிய பத்திரிகைகளின் உரிமையாளரான திரு புனுசாமி முதலியார் இன்று காலமாகிவிட்டார்.

தங்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் தீவிரவாத சக்திகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

வலைப்பிரதேச அபிவிருத்தி சபை அதிபர் திரு. தர்மசிறி சேனநாயக்காவும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

# 'மொழிவாரியாக பிரிவதால் தேசியஒற்றுமைதடைப்படும்'

## யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேச்சு

அராலி, ஞாயிறு

"ஒரு பிள்ளையின் போதனமொழி தாய்மொழியாயிருத்தல்வேண்டும் ஆனல் இந்தப் போதனை மூலம் பல்வேறு மொழி, கலாச்சாரம், சமயம் போன்ற வேறுபாடுகளுள்ள மக்கள் வாழும் நாட்டில் மொழிவாரியாக மாணவர்கள் பிரிக்கப்பட்டுத் தனி வகுப்பறைகளில் போதிக்கப்பட்டுவருவதால் வடக்கிற்கும் தெற்கிற்குமுள்ள பேதங்கள் மேலும் விரிவடைந்து ஒரு நாட்டின் மக்கள் ஒன்றுகூடி உரையாடி, உறவாடித் தேசிய ஒற்றுமையை வளர்த்துக்கொள்ள முடியாதநிலை உருவாகலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய இலங்கை மெதடிஸ்ற் சேர்ச் தலைவர் வணை. ஜீ. டென்சில் சில்வா கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் "ஒரு நாட்டின் கல்வித்திட்டம், நாட்டிற்குத் தேவையான மக்களை உருவாக்கவேண்டுமேயல்லாமல் மூன்றாந்தரப் பிரஜைகளை உற்பத்தி செய்யக்கூடாது

இந்நாட்டில் இன்றைய கல்வி நிலையைப் பார்க்கு மிடத்து மாணவர் மனமுடைந்த நிலையிலுள்ளனர். வகுப்பறைகளில் இடவசதிக்கும் அதிகமான மாணவர்: தாம் கற்கும் கல்வி மூலம் தமக்கு வேலைவாய்ப்புகள் கிட்டாதுபோகுமோ என்ற ஏக்கம். மாணவரிடையே அமைதியின்மை, ஒழுக்கக் குறைவு, ஆத்மீக சிந்தனை, சமூக உறவற்ற நிலை. கல்வி நிலையங்கள் தமது கடமையைச் செய்ய முடியாத தடைகள். இப்படிப் பல பிரச்சினைகள்" என்றார்.

......

## கி. பாகிஸ்தானில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து வெளியேறிய பாரிஸ் நிருபர் பாரிஸில் தெரிவித்துள்ளதாக பரிஸ் ஏ. எப். பி செய்தி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெறும் தாக்குதல், தீ வைப்புசம்பவங்களை வெளியுலகுக்குத்தெரியாவண்ணம் செய்வதற்கானமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என மேற்படி செய்தி மேலும் தெரிவித்துள்ளது

# ஆசிரியர் அப்பாத்துரை



'பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து' என்ற வள்ளுவனர் வகுத்த பெருமைக்கு இலக்கியமாகத் திகழும் இன்சொல்லாளர், ஏறுபோற் பீடு நடையார் பொய்யா மொழியார், எங்கள் ஆசிரியர் அப்பாத்துரை.

சிறப்பினும் செந்நெறியாம் சிவநெறியைச் சீலமுடன் எடுத்துரைத்து, சித்தாந்த வித்தகனுய் சைவத்தின் காவலனுய் பண்ணும் மெய்கண்டான் பள்ளியிலே பல்லாண்டு ஆசானுய் அவர் விளங்கியவர். தண்ணுர்செந்தமிழ் மொழியைத் தாரணியோர் மெச்சிடவே பண்ணுகக் கற்பித்தவர். எங்கள் கண் போன்றவர். இத்துணைச் சிறப்பெல்லாம் கொண்ட எங்கள் ஆசான் அப்பாத்துரை மெய்கண்டானில் இல்லையே எனக் கவலை வேண்டுவதில்லை. காற்கல் தூரம் வடக்கே சென்றால் 'திருமந்திரம்' இல்லத்தில் அவர் ஆன்றவிந் தடங்கி இருப்பக்காணலாம்.

பாலெல்லாம் நல்லாவின் பாலாகா தென்பதுபோல் ஆசிரியர் எனப் பெறுவோர் எல்லாரும் நல்லாசிரியர் ஆகார். ஆசிரியத் தொழிலை வாழ்வுக்கும் வருவாய்க்குமான தொழில் எனக் கொள்வோர் பலர். தாம் கொண்ட தொழிலின் பண்புக்கும் இயல்புக்கும் ஏற்க வாழ்வை அமைப்போர் சிலர், பின்னவருள் ஒருவரே எங்கள் ஆசான். பிறப்பிலே இவர் அருட்செல்வப் பிறப்பன்றோ!

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளி உண்டாகும்' என்றார் பாரதியார். அந்த உண்மை ஒளியை இவர்கள் பார்க்கின்றோம். மாணவர் உள்ளம் கவர் கள்வராய், கேட்டார்ப் பிணிக்கும் தகையராய், கேளாரும் வேட்ப மொழியும் இயல்பினராய் புன்னகை பொழியும் முகத்தினராய் விளங்குகின்றார், இன்றெல்லாம் அறிவியல் கலை, கணிதம் முதலாய கலைகளைக் கற்பித்தற்கென சிறப்புப் பயிற்சிப்பெற்ற ஆசிரியர் உளர். அன்றெல்லாம் அந்நிலையில்லை எனினு. இக்குறைகளை நீக்கி மெய்கண்டான் மாணவர் அனைவரும் அறியாதனவற்றை அறியவும் விளங்காதனவற்றை விளங்கவும் செய்தவர் இவர்.

கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உள்ளம் கொள்ளக் கொடுக்கும் முறை ஒரு தனிப்பேறு. ஆசிரியர்களிலே அவர் ஒரு தனி மணி பண்பிலே தெய்வமாக விளங்கும் அவர் ஒரு பல்கூடர் விளக்கு கலைகளிலே அவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம், காய்தல் உவத்தல் இன்றிக் கருத்துக்களை வழங்குகல். சமன்செய்து சீர்தூக்கும் சால்பு கொண்டு செய்வதில் பெரு விருப்பு. இத்துணைச் சிறப்புக்கள் பல பொருந்தியவர் நமது ஆசிரியர்.

இவர் வாழ்க்கை பொய்மையே பேசிப் பெருமிதனைச் சுருக்கும் கலியுக மாந்தருக்கு நாணம் தரவல்லது. இவர் பிறர் செயலில் தலையிடாதவர் தம்கருமம் செய்பவர்' ஆதலால் தவம் செய்பவர்.

எங்கள் ஆசிரியப் பெருந்தகைக்கு உடல் நலமும் உளமகிழ்வும், மங்கலப் பேறுகள் பலவும் அருள வேண்டுமென விசயத்தவனை முருகப்பெருமானை வேண்டுவோமாக.

புலவர் சா. வேல்முருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா விமர்சனம்

# வா ராஜா, வா!

சபாஷ் பிரபாகர், சபாஷ்! மாஸ்டர் பிரபாகருக்கு எத்தனை சபாஷ் வேண்டுமானாலும் போடலாம்!

'ஒரிஜினல்' சிவாஜிகணேசனையே தூக்கி அடித்து விடுகிறார்.

'பயிற்று எம் ஜி ஆர் பிச்சைவாங்க வேண்டும்!

இல்லாவிட்டால், இந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே எடுத்த எடுப்பிலேயே 'பொடிப்பயல்' மாஸ்டர் பிரபாகரை ஹீரோ ஆக்க விரும்பாரா ஏ பி. என்?

பெரிய பெரிய நட்சத்திரங்களையெல்லாம் நடிக்க வைத்து, லட்சக்கணக்கில் பணத்தை வாரியிறைத்து, ஓஹோ வென்று விளம்பரப்படுத்தி எடுக்கப்பட்ட படமெல்லாம் ஒருவாரம் கூட ஓடாமல் ஓடவைத்து) படு தோல்வி அடைந்துள்ள அனுபவத்தை நன்குணர்ந்த ஏ பி என், துணிந்து மாஸ்டர் பிரபாகரை ஹீரோ' ஆக்கியிருக்கிறாரென்றால், அவரின் திறமையை எப்படி எடைபோட்டு வைத்திருக்கிறார் என்று சொல்ல வேண்டுமா? 'வா ராஜா, வா!' என்று தமிழ் சினிமா உலகின் முன்னணிக்கு அழைத்து வந்திருக்கிறார் மாஸ்டர் பிரபாகரை, ஏ பி என்!

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து தந்து, 'கல்லும் கதைபேசும்' என்பதை நிரூபிக்கும் மாமல்லபுரத்து 'கைட்' டாகவருகிறார், மாஸ்டர் பிரபாகர்!

கல்லொன்றிலே வடித்திருந்த ஏழு வாக்கியங்களை அவனின் கருத்தை ஈர்க்கிறது. அந்த ஏழு வாக்கியங்களையும் அவன் அனுபவத்தில் காண்கிறான். இந்த ஏழு வாக்கியங்களையும் நிரூபிக்க ஏழு சம்பவங்கள்!

உல்லாசக் கேளிக்கை 'மினி'க் கன்னியர்களுக்கு 'கைட்'டாகி, அவர்களுடன் 'ஆட்டமும் பாட்டமும்' போடும்போது மாஸ்டர் பிரபாகரை அப்படியே வாரியணைக்க நெஞ்சம் துடிக்கிறது!

'அந்தநாள் ஞாபகம் வந்ததே...?' என்ற சிவாஜியின் 'உயர்ந்தமனிதன்' பிடியை ஒரு பிடிபிடித்து அப்படியே நடிகர் திலகத்தை 'இமிற்றேற்' பண்ணுகிறானே, பிரபாகர்-

சிவாஜி கணேசன் தோற்றே விட்டார், தோற்று! நடையா, அது நடையா? என்னமாதிரி செய்கிறான் இந்தப் பயல்!

'பறவைகள் பலவிதம்...' என்று சிவாஜியின் காதல் 'ஸ்ரண்டை' பிரபாகர் செய்கிறானே! பென்னும் பெரிய பெண்களுடன் 'பயலை' ஒரு சில விதைகள் காதல் செய்ய வைத்து, அதில் வெற்றியும் கண்டுவிட்டார், இந்த ஏ பி. என்!

சண்டையும் போடுகிறார்! தன்னந்தனியாக நின்று சட்டை பிசகாமல், காயமே இல்லாமல், ஒரு பெரிய கூட்டத்தை 'கும் கும்' என்ற குத்துகளினால் துரத்தியடிக்கும் முதிர்ந்த நடிகர்களையே தூக்கியடித்து விடுகிறான் பிரபாகர்!

பிரபாகருக்கு ஏற்ற தங்கையாக நடிக்கிறார் பேபி சுவதி! அருமையாக நடித்திருக்கிறாள்.

'பின்னணி' சீர்காழியாரும் முன்னணியில் வந்து பாடி நடிக்கிறார்! வி எஸ் ராகவன், மனோரமா, டி என் சிவதாணு, சரஸ்வதியும் நடித்திருக்கிறார்கள், குறை செல்ல முடியாத விதத்தில்! பாட்டுக்கள் இனிக்கின்றன! அதுடன், மாபல்லபுரத்து உயர்ந்த அழகிய சிற்பங்களை மூன்றுமணி நேரத்தில் இங்கிருந்தே பார்க்கக்கூடிய சந்தர்ப்பமும் கிடைக்கிறது

கதை வசனம் டைரக்ஷன் ஏ. பி. நாகராஜன்! லட்சக் கணக்கில் பணத்தைக் கொட்டி புராணப்படங்களை பிரமாண்டமான தயாரிப்பில் வண்ணத்தில் எடுத்த அவர், துணிந்து 'குளுகுளு' வண்ணத்தில் குழந்தை நட்சத்திரமொன்றை 'ஹீரோ' வாகப் போட்டு வெற்றி படமொன்றைத் தந்ததற்காக எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாம்.

ஒரே மாதிரியான, அர்த்தமில்லாத கதையுடன் குறிப்பிட்ட பெரிய நடிகர்களே நடித்த படங்களையே பார்த்துப் பார்த்தும் புளித்துப் 'போர்' அடித்துப்போன ரசிகர்களுக்கு இப் படம்புது உற்சாகத்தை அளிக்கிறது.

பெரிய நடிகர்களை எல்லாம் படிக்க வேண்டிய பாடம் மாஸ்டர் பிரபாகரிடம் நிறைய இருக்கிறது!

குடும்பத்தோடு தவறாது சென்று பார்க்க வேண்டிய அருமைக்கு அருமையான 'வா ராஜா வா' யாழ்ப்பாணம் வின்ஸர் திரையில் ஓடிக்கொண்டிருக்கிறது.

— ராமா ராஜகோபால்

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையைச் சேர்ந்த சுமார் 60 மாணவரும் ஆசிரியர்களும் கொண்ட குழுவினர் தலைமையாசிரியர் திரு. நா. கார்த்திகேசு தலைமையில் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளுகின்றனர்.

யாழ்ப்பாணம்கோட்டை, நூதனசாலை, நல்லூர், திருநெல்வேலி கமத்தொழிற் பாடசாலை, பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலை, கீரிமலை செல்வச்சந்நிதி முதலிய இடங்களையும் அவர்கள் பார்வையிடுவார்கள்.

## ஆங்கிலமும் கணக்கும் முட்டுக்கட்டை

கோட்டை, ஞாயிறு

ஆங்கிலமும் கணக்கும் ஜீ சீ ஈ சாதாரண பரீட்சை யெடுக்கும் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்கு முட்டுக்கட்டையாகவுள்ளன, பரீட்சை ஆணையாளரின் சமீபத்திய நிர்வாக அறிக்கையில் இருந்து இது தெரியவந்துள்ளது.

1969-ம் ஆண்டு ஆங்கில பாடத்துக்குத் தோற்றிய 57'139 பாடசாலை மாணவர்களில் 13·5 வீதத்தினரே சித்தியடைந்துள்ளனர். கணக்குப் பாடத்துக்குத் தோற்றிய 115 069 மாணவர்களில் 19 வீதத்தினரே சித்தியடைந்துள்ளனர் என்பதையும் மேற்படி அறிக்கை வெளியிட்டுள்ளது.

......

## பாக்குநீரிணையை நீந்துவார்

மன்னார், ஞாயிறு

பாக்குநீரிணையை நீந்திக் கடக்க யப்பானிய இளைஞர் ஒருவர் முன்வந்துள்ளார். இவர் இந்தச் சாதனையை இன்று தலைமன்னாரிலிருந்து ஆரம்பிக்கிறார்.

## குழந்தை கிணற்றில் வீழ்ந்து மரணம்

பருத்தித்துறை, ஞாயிறு

நாலு வயதுக் குழந்தை ஒன்று கிணற்றில் தவறி விழுந்ததால் மரணமான சம்பவம் சனிக்கிழமை [illegible] கரவெட்டிப் பகுதியில் [illegible] பெற்றது.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 15-ம் திகதி
திங்கட்கிழமை
(29-3-71)

மேடம்- குடும்பக்கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும். உங்களைப் பற்றிச்சிலர் புனைந்துரைகளைப் பரப்புவார்கள்.

ரிஷபம்- இனிக்கப்பேசி காரியங்களைச் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர்.

மிதுனம்- முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படலாம். சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு.

கடகம்- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் ஏற்படும். கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும். தாய்வழி மூலம் தனவரவுக்கு இடமுண்டு.

சிம்மம்- புதியவழிகள் மூலம் பொருள்வரவுக்குஇடமுண்டு. சிலருக்குபதவிஉயர்வும் கிடைக்கலாம். குடும்பத்தில் இனிமைதவழும்.

கன்னி- துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள் சிலருக்குப் பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம் கல்வியிலும் ஆர்வம் பிறக்கலாம்

துலாம்- தாம்பத்திய வாழ்வில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு, காதலர்களாயின் இன்பமான சூழ்நிலைதென்படும்.

விருச்சிகம்- வெளியிடத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம்.

தனுசு- ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் தென்படும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும்.

மகரம்- மனம் போல் வாழ்வு இன்றுமலரும். கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக்கிடைக்கும்.

கும்பம்- வரவில் உயர்வு தென்படும். பெரியவர்களின் வாழ்த்துக்கிடைக்கும் கலைஞர்களுக்கு இன்று சிறப்பான நாள்.

மீனம்- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். தனி வழிப்பயணத்தை இன்று தவிர்த்துக் கொள்ளவும். அமைதிவேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## குமார சூரியருக்கு புகழ்மாலை

பொத்துவில் ஞாயிறு

செனட்டர் திருசெ குமாரசூரியரைத் தலைவராகக் கொண்ட தமிழ்மக்கள் மிகவும் அதிர்ஷ்டம் செய்தவர்கள் தமிழர்களுக்கு நல்லதொரு எதிர்காலம் காத்திருக்கிறது என அம்பாறை தம்பிலுவில்குறிச்சியில் நடைபெற்றஒரு கூட்டத்தில் திரு என் தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்

திரு ரி சந்தோவிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு தர்மலிங்கம் மேலும் கூறியதாவது'-

தமிழர்கள் எல்லாவகையிலும் கெட்டித்தனமுடையவர்களாக இருந்தபோதிலும் அரசியல் விஷயத்தில் மிகமாறுபாடாகவேயுள்ளார்கள். அதனாலே தான் தமிழர்கள்கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள் இன்றைய அரசாங்கத்தோடு தமிழர் ஒத்துழைக்கவேண்டும் தமிழருக்கும் சிங்களவருக்கும் பாலமாக அமைந்துள்ளார் திரு குமாரசூரியர். [illegible] பட வேண்டும்.

## வடபகுதியில் நாசவேலைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதில பொலிஸார் தீவிரம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் நாசவேலைகள் தலைதூக்கியுள்ளதைத் தொடர்ந்து பொலிஸார் விழிப்படைந்துள்ளார்கள். பொலிஸார் இந்த நாசவேலைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். சிலரைப் பொலிஸார் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

கோண்டாவிலில் யாழ் தேவி பெட்டியொன்று தீக்கிரையானதைத்தொடர்ந்து திருநெல்வேலிச்சந்தியில உள்ள உபமின் நிலையம் டைனமற் வைத்துத் தகர்க்கப்படவிருந்த ஒரு சம்பவம் பொலிஸாரை மேலும் இப்போது உஷார்படுத்தியுள்ளது.

டைனமற் வைக்கப்பட்டு, சிகரெட் மூலம் டைனமைற்றைபற்றவைக்க முயன்றதாகக் கூறப்படும்சம்பவத்தைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். இந்தச்சம்பவம் இம்மாதம் 23-ம்திகதிகண்டுபிடிக்கப்பட்டது. உபமின் நிலையம் அன்று திட்டப்படி தகர்க்கப்பட்டிருந்தால், வடபகுதி முழுவதும் சுமார் ஆறு மாதம் இருளில் மூழ்கிப் போய்க் கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமென பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இச் சம்பவம் சம்பந்தமாகச் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்

அரசாங்கத்தின் உடமைகளை நாசப்படுத்துவதற்கு திட்டமிட்டுச் செய்யப்படும் எந்தச் செயலையும் செய்யும் கோஷ்டிகள் அகப்பட்டால், அவர்களுக்குச் சட்டத்தின் பிடியில் சரியான பாடம் புகட்டப்படுமென்று வட பகுதி பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை விடுக்கிறார்.

கொண்டாவிலில் யாழ் தேவி பெட்டியொன்று எரிக்கப்பட்டது சம்பந்தமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

'கல்விவளர்ச்சிக்கு

## ஆசிரியர் அக்கறை மட்டும் போதாது'

வாதவூ ஞாயிறு

ஆசிரியர்கள் மாத்திரம் கரிசனை எடுப்பதாலோ தியாகம் செய்வதாலோ கல்வித்துறையில் மாணவர்களை முன்னேற்றிவிட முடியாது! குழந்தைகளின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்தளவில பெற்றோரின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். மாணவர்கள் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக ஓம்பவேண்டும். கல்விக்கூடங்கள் சமுதாய முன்னேற்றத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றன இன்று அநேக பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாதது பெருங்கவலைக்குரியது.

புங்குடுதீவு ஸ்ரீ கமலாம்பிகை வித்தியாசாலை மண்டபத்தில் வித்தியாசாலைப் பழையமாணவர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசிய ஆசிரியமணி திரு க தியாகராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் பாடசாலை முன்னேற்றத்திற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழையமாணவர் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்பு அவசியமெனக் கூறினார்.

இக்கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்தலின்போது தலைவராக க தியாகராசாவும், உபதலைவர்களாக அ. சண்முகலிங்கமும் நா விநாயகமூர்த்தி ஆகியோரும், செயலாளராக வ இராமச்சந்திரனும், உபசெயலாளராக அ சண்முகநாதனும், தனதிகாரியாக செ சதானந்தனும், உபதனதிகாரியாக க. செ. கிருஷ்ணபிள்ளையும். காப்பாளர்களாக பாடசாலைத் தலைமையாசிரியர் கா. பாலசுந்தரம், இளைப்பாறிய ஆசிரியர்களான ச. சொக்கலிங்கம், க. ஐயாத்துரை ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## 'மதத்தைக்கேலி செய்யாதீர்'

— கிரிதாரி பிரசாத்

பருத்தித்துறை, ஞாயிறு

"எந்தமதத்தைச் சேர்ந்தவனாயினும் அம்மதக்கடமைகளைச் சரிவரச்செய்தால் மட்டுமே அவன் ஆத்மசாந்தியையும், வாழ்வின் அமைதியையும் பெறமுடியும் அவனே கடவுளைக்காணவும் தகுதியும் பெற்றவனாவான்"

இவ்வாறு ஈழத்துக்கு விஜயம் செய்துள்ள திரு. கிரிதாரி பிரசாத் பருத்தித்துறை ஸ்ரீ சாரதாதேவி நிலைய சேவை ஆச்சிரமத்தில் உரை நிகழ்த்தியபோது குறிப்பிட்டார்.

மேலும், திரு: பிரசாத பேசுகையிற் கூறியதாவது! "வாழ்வில் இன்பத்தைத் தரக்கூடிய மதத்தைக்கேலி செய்யும் பழக்கத்தை நாம் கைவிடல்வேண்டும். முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு இன்று மதத்திலேயே நாம் நம்பிக்கை பூணவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இன்று விழுந்தடித்து விஞ்ஞான [illegible]ங்களைப் பணம் கொடுத்துப் பயிலும் மாணவ, மாணவிகள், ஸ்ரீபரமகம்சர் ஸ்ரீ சாரதாதேவி, விவேகானந்தர் ஆகியோர் காட்டிய பாதையைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது'

......

## ஒவ்வொரு தொகுதியில் கூ. வி. பண்ணை

கோட்டை, ஞாயிறு

நாட்டிலுள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் கூட்டுறவு விவசாயப்பண்ணை விரைவில் நிறுவப்படும் என காணி விவசாய அமைச்சர் திரு, ஹெக்டர் கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

இக்கூட்டுறவு விவசாயப் பண்ணைகளால் கிராமப்புறத்து விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர். இதனால் விவசாய உற்பத்திகள் அதிகரிக்கும் எனவும் விவசாயிகள் இதுவரைகாலமும் அனுபவித்துவந்த கஷ்டங்கள் நீங்கிவிடும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசியல் நிர்ணயசபையில்

# 9 அம்சக்கோரிக்கையையும் சமர்ப்பித்தோம்!

## நல்லூர் எம். பி.யின் அறிக்கைக்கு அமிர்தலிங்கம் பதில்

யாழ்ப்பாணம், திங்கள் "தமிழர் ஒற்றுமை முன்னணியின் 9 அம்சத் திட்டத்திற்கு மாறாகவும், அக்கோரிக்கைகளுக்கு முற்றும் முரணான கூட்டாட்சிக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டு திரு. அருளம்பலமும், அவரது சகாக்களும் அரசாங்கத்தில் சேர்ந்திருக்கின்றனர் என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இது சரியாயின் அவர்கள் தமிழ்மக்களின் 9 அம்சக் கோரிக்கைகளையும் கைவிட்டுவிட்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது."

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு.ஏ அமிர்தலிங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: "தமிழ் அரசியல் கட்சிகளிடையே வல்வெட்டித் துறையில் உருவாக்கப்பட்ட ஒற்றுமையையும், அங்கு எல்லாக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 9 அம்சக் குறைந்தபட்சக் கோரிக்கைகளையும் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு, கூட்டாட்சிக் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்ற உறுப்பினர் மூவரும் அரசாங்கக் கட்சியில் சேர்ந்திருக்கின்றனர், அவர்களுடைய இச்செய்கையையொட்டி, தமிழ்க்காங்கிரஸ் தலைமைப்பீடம் என்ன முடிவெடுக்கும் என்பதைப் பற்றி நான் எவ்வித ஹேஸ்யமும் கூற விரும்பவில்லை. ஆனால் திரு அருளம்பலம் தமது செயலுக்குக் கொடுத்திருக்கும் விளக்கத்திற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

வல்வெட்டித்துறையில் இவ்வருடம் பெப்ரவரி 7ந் திகதி 4 தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட 9 அம்சக் கோரிக்கைகளில் முதல் ஐந்தும் தமிழ்மக்களின் மொழி உரிமை பற்றியவை. அரசியல் நிர்ணயசபை வழிநடத்தும் குழு அவற்றை ஒன்று சேர்த்துச் சுருக்கி ஒரே திருத்தமாக்கியது. அக்குழுவில் உறுப்பினராக இருந்த திரு. அருளம்பலம் அறிந்திருக்கவேண்டும். மொழி பற்றிய இத்திருத்தத்தை திரு செல்வநாயகம் பிரேரிப்பதற்கு அறிவித்தல் கொடுத்திருக்கிறார். தமிழர் ஒற்றுமை முன்னணியின் முதல் ஐந்து கோரிக்கைகளும் இத்திருத்தத்தில் அடங்கியிருக்கின்றன.

ஒற்றுமை முன்னணியின் 6வது கோரிக்கை நீதிமன்ற நடவடிக்கை அரசியல் தலையீடற்ற நீதி பரிபாலனம் என்பவற்றை ஒட்டியது. திரு. செல்வநாயகமும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாகக் கொண்டு வந்திருக்கும் திருத்தம், ஒற்றுமை முன்னணியின் ஆறுவது கோரிக்கையாகும்.

ஒற்றுமை முன்னணியின் ஏழாவது கோரிக்கை சாதிப் பிரச்சினை பற்றியது. அதையொட்டிய திருத்தம் திரு செல்வநாயகத்தினால் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

ஒற்றுமை முன்னணியின் எட்டாவது கோரிக்கை இலங்கை மதச் சார்பற்ற அரசாக இருக்கவேண்டும் என்பது நான்கு கட்சிகளும் ஒப்புமிட்ட இக்கோரிக்கை சொல்லுக்குச் சொல் திரு. செல்வநாயகத்தின் திருத்தத்தில் இடம்பெற்றிருப்பதை அறிவுள்ளவர்கள் மறுக்கமாட்டார்கள்.

ஒற்றுமை முன்னணியின் ஒன்பதாவது கோரிக்கை குடியுரிமை பற்றியது அக்கோரிக்கையையும் எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட அதே உருவத்தில், திரு செல்வநாயகத்தினால் அரசியல் நிர்ணய சபையில் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. எனவே வல்வெட்டித் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்பது கோரிக்கைகளும் அரசியல் நிர்ணய சபையில் திரு. செல்வநாயகத்தினால் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பது தெளிவு.

அந்த ஒன்பது கோரிக்கைகளுக்கும் மேலாக, எமது சமஷ்டி போன்ற சில விஷயங்களை உள்ளடக்கிய திருத்தங்களையும் நாம் கொண்டு வந்திருக்கிறோம். அவற்றை திரு. அருளம்பலமோ ஏனைய தமிழ்க்காங்கிரஸ் எம். பி.க்களோ ஆதரிக்கவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை ஆனால் நான்கு கட்சிகளும் ஏற்றுக்கொண்ட ஒன்பது அம்சங்களையும் உள்ளடக்கிய திருத்தங்களை ஆதரிக்கவேண்டியது அதற்குக் கையொப்பமிட்ட கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களது கடமையாகும் அந்த 9 கோரிக்கைகளையும் தமிழரசார் கொண்டுவர மறுத்துவிட்டார்கள் என்று திரு. அருளம்பலம் கூறுவது முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கும் முயற்சியேயன்றி வேறில்லை.

வடபகுதி

## கடல் தொழிலாளருக்கு வீடு அரசு கட்டிக் கொடுக்கும்

அரியாலை, ஞாயிறு வடபகுதி கடற்றொழிலாளருக்கு அரசாங்கம் வீடுகள் அமைத்துக் கொடுக்கவிருக்கிறது. யாழ். அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக நடைபெற்ற ஓர் ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு சொன்னார். எம். பி.க்களும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அரசாங்க அதிபர் பேசுகையில், வடமாகாணத்தில் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் அவ்வத் தொகுதியைச்சேர்ந்த கடற்றொழிலாளருக்கு 25 வீடுகள் வீதம் அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முன் வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

......

### காரியாலயம்

பாண்டிருப்பு ஞாயிறு அகில இலங்கைகம்யூனிஸ்ட் கட்சி வாலிப இயக்கத்தின் பாண்டிருப்புக்கிளை தமக்கென பாண்டிருப்பு கல்முனை பிரதான வீதியில் காரியாலய மொன்றை திறக்கவிருக்கின்றது.

......

### பயிற்சிக்கு சென்றார்

வடமராட்சி விவசாய போதனாசிரியர் பிரிவில் கடமையாற்றும் விரிவாக்க விசாலிப்பு உத்தியோகத்தர் திரு ஏ வேலுப்பிள்ளை மாவெலவிலுள்ள நெல் ஆராய்ச்சிக் கழகத்திற்கு பயிற்சிக்காகச் சென்றுள்ளார்.

......

### கடகட..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவைப்பட்டாலும் அது உடனுக்குடன் கொடுத்துவிடும் ஒவ்வொரு காரும் செல்லும் வேகத்தையும் இந்த அதிசய கம்பியூட்டர் அறிந்து வைத்திருப்பதால் அதே வேகத்தில் அக்கார் சென்றால், போட்டி முடிவில் அவற்றின் நிலை எப்படியிருக்கும் என்பதையும் ஹேஸ்யம் பார்த்துக் கூறிவிடும் இந்த அதிசய கம்பியூட்டர்

ஐ சி எல் கம்பனி அமைத்துள்ள இந்த அற்புத கம்பியூட்டர், அடுத்த மாதம் கழக்காபிரிக்காவில் நடைபெற விருக்கும் நீண்ட தூர கார் ஓட்டப் பந்தயத்தின் போது இயங்குவதை யாரும் காணக்கூடியதாக இருக்கும்.

......

### நியமனம்

பருத்தித்துறை, ஞாயிறு பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை மேற்பார்வையாளராக திரு கே வேலுப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார் பனை வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் சிரேட்ட உறுப்பினருள் ஒருவரான இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார். வைத்தியசாலை நிர்வாகம் பற்றி அறிவதற்காக அடுத்த மாதம் இவர் இந்தியா செல்லவிருப்பதாகத் தெரிகிறது.

### வீடு தீக்கிரை

வேலணை, ஞாயிறு வேலணை கிழக்கு செட்டிபுலத்தில் நேற்று நடந்த தீ விபத்தினால் வீடொன்று முற்றாகச் சாம்பராகியது.

கந்தையா என்பவரது இவ் வீட்டில் அப்போது எவரும் இல்லாதிருந்ததால், பொருட்களையோ, உடுபிடவைகளையோ மீட்க முடியவில்லை இரவு வேளையில் இந்த வீடு தீக்கிரையாகியுள்ளது

......

### பல்லவராயனில் கால்நடைநோய்

பல்லவராயன்கட்டு ஞாயிறு பல்லவராயன் கட்டுக்கிராம சபைப் பகுதியில் கால்நடை நோய் பரவிவருகிறது இந்நோயினால் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட கால்நடைகள் மாண்டுள்ளன. நோய் கட்டுப்படுத்தப் படாவிடின் இப்பகுதியிலுள்ள [illegible] போகலாம் என அஞ்சப்படுகிறது.

ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம்

## சமரசம் ஏற்படாவிட்டால் வேலை நிறுத்தமாம்

யாழ்ப்பாணம், திங்கள் அடுத்த மாதம் 5-ம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

4-ம் திகதிக்கு முன்னர் சமரசம் ஏற்படாவிடில் அகில இலங்கையிலுள்ள தமது சங்கக் கிளைகள், மாநகரசபை, பட்டினசபை, நகரசபை ஆகியவற்றில் கடமையாற்றும் சங்கத்தொழிலாளர்கள் அனைவரும் இவ் வேலைநிறுத்தத்தை அடுத்தநாளான 5-ம் திகதி மேற்கொள்வார்களென்று தெரிவிக்கப்பட்டுள்ளது

ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர்சங்க பொதுக்காரியதரிசி திரு. ஆர் செல்லையா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளதாவது:

"அனுராதபுரம் பாதுகாப்புச்சபையிடம் எமது சங்கத்திற்குக் காரியாலயமொன்று அமைப்பதற்குக் காணி கேட்டோம் காணி கொடுக்கச் சட்டத்தில் இடமில்லையென்று 1968-ம் ஆண்டில் சங்கத்திற்கு ஓர் காரியாலயம் தந்தார்கள். அக் காரியாலயத்தை இம்மாதம் 5-ம் திகதிக்குள் திருப்பித் தரும்படி பாதுகாப்புச்சபையால் இம்மாதம் 1-ம் திகதி பதிவுத்தபால் அனுப்பப்பட்டது. உடன் சங்கத்தால் வேறொரு இடம் தரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும், வேறு இடம் தராமலே பலாத்காரமாக இம்மாதம் 10-ம் திகதி காரியாலயத்தை உடைத்து அதிலுள்ள 96 கிளைகளினதும் புத்தகங்கள், பயில்கள் உட்பட சகல பொருட்களையும் கொண்டுபோய்விட்டார்கள் எமது சங்கத்தை நடாத்த எதுவித தஸ்தா வேசுகளும் இடமும் இல்லாமையால் இப்பலாத்காரச்செயலை எதிர்த்து அனுராதபுரம் பாதுகாப்புச்சபையின் கீழ்கடமையாற்றும் மலகூடப்பகுதியில் சேவை செய்த சகல தொழிலாளர்களும் இம்மாதம் 12-ம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வேலைநிறுத்தத்தைச் சமரசப்படுத்தாமல் வெளியூரிலிருந்து நாளொன்றுக்கு 10 ரூபா வீதம் சம்பளம் கொடுத்துச் சில தொழிலாளரைக் கொண்டு வேலை செய்கிறார்கள். இதை எதிர்த்துத்தான் அடுத்தமாதம் 5-ம் திகதி தொடக்கம் அகிலஇலங்கை ரீதியில் வேலை நிறுத்தம் செய்யத்தீர்மானித்திருக்கிறோம் இவ் வேலை நிறுத்தம் எமது நியாயமான கோரிக்கை நியைவேறும் வரை நடைபெறுமென்பதை அறியத்தருகிறோம்."

## சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள் "இச்சங்கத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் புதிய உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடனும் நேர்மையுடனும் பணியாற்றி சங்கத்தை நல் வழியில் நடத்தி நமது நாட்டுக்கு நன்மை செய்யவேண்டும்"

கடந்த 2 ஆண்டுக் காலமாக கூட்டப்படாமலிருந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் விசேஷ அழைப்பின்மீது கூட்டப்பட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் யாழ்ப்பாணப் பிரிவுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்,

யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு நிமல் அமரசேகரா (யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்), உபதலைவர்கள்: திரு கே சிவபாலன் (பலாலி கனிட்ட பல்கலைக்கழக அதிபர்). திரு எஸ் பி சிவபாதம் (கல்வி ஆலோசகர்), செயலாளர்: முனாந்திரப் இ பொ இராசைய உபசெயலாளர்: திரு டபிள்யு என் தேவகடாட்சம் (யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர்), பொருளாளர்: திரு ஆர் கே தம்பையா, உபபொருளாளர்: திருமதி ஏ சுவாமிநாதர் (யாழ் மாநகரசபை உறுப்பினர்)

எட்டுப் பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரியப்பட்டது

முன்னைநாள் செயலாளர் சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்ட 3 பிரேரணைகளை விசாரித்து முடிவு செய்வதற்காக திருவாளர்கள் கே சிவபாலன், எஸ் பி சிவபாதம், பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எஸ் மாணிக்கம் ஆகியோரைக் கொண்ட ஒரு உபகுழுவும் நியமிக்கப்பட்டது.

### நிர்வாகிகள் தெரிவு

ஊரதீவு, ஞாயிறு புங்குடுதீவு- வல்லன் ஸ்ரீசண்முகநாத வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: மூ நடராசா, செயலாளர்: சோ க ஐயம்பிள்ளை, உபசெயலாளர்: சி கோபாலபிள்ளை, பொருளாளர்: க சிவசம்பு, காப்பாளர்கள்: வைத்தியர் சி கணேஸ் க சுப்பிரமணியம், க ஐயாத்துரை. எட்டுப்பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

......

### 6 மணி வரை திறந்திருக்கும்

அரியாலை, ஞாயிறு தமிழ் - சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டுப் பொதுமக்களின் வசதியையொட்டி சகல கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் மாலை 6 மணிவரை திறந்து இருக்கும்.

......

### ஹஜ்யாத்திரிகர் திரும்புகின்றனர்

கோட்டை, ஞாயிறு இலங்கையிலிருந்து மெக்காவுக்கு 'ஹஜ்' யாத்திரை செய்த 120 முஸ்லிம் யாத்திரிகர்களும் இம்மாதம் 30-ந் திகதி 'ஷபினத்துல் அரப்' என்ற பாகிஸ்தான் யாத்திரிகர் கப்பலில் திரும்புகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மேயர் மீதான

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது

## சாதகம்-12பேர் பாதகம்-7பேர்

(சபை நிருபர் 'யோகி')

யாழ்ப்பாணம், திங்கள்

**யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திரு. ரி. எஸ். துரைராஜா மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 5மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. நம்பிகையில்லாத் தீர்மானத்திற்கு சாதகமாக 12 பேரும் பாதகமாக 7 பேரும் வாக்களித்தனர். இருவர் நடுநிலைமை வகித்தனர். ஒருவர் கூட்டத்திற்கு வரவில்லை.**

யாழ். மாநகர சபையின் விசேஷகூட்டம் நேற்றுமாலை 3 மணிக்கு கமிஷனர் திரு. ஏ. ரி. சுந்தரம் தலைமையில் ஆரம்பமானது கலரியிலும் நகர மண்டபவளவிற்குள்ளும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். இன்ஸ்பெக்டர் கார்த்திகேசு தலைமையில் பொலிஸ் கோஷ்டியொன்று கடமையாற்றியது.

கமிஷனர் வந்து அமர்ந்ததும், மாநகர சபை பாதுகாவலர் சலூட் அடித்து மரியாதை செலுத்தினர். நப்பிக்கையில்லா தீர்மானத்தில் கையெழுத்திட்ட 12 பேரும் வந்திருந்தனர்.

திரு. தம்பு கந்தையா நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பிரேரித்தார். திரு கே வி தெய்வேந்திரன் அனுவதித்தார்.

திரு ஏ ஜி இராசசூரியர் சபையில் காணப்படவில்லை. உறுப்பினரான திரு எஸ் சிவசுப்பிரமணியம் கூட்டத்திற்கு வரவில்லை 21 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

திரு. தம்பு கந்தையா, மேயர் மீது ஒன்றன்பின் ஒன்றாக குற்றச்சாட்டுக்களை சுமத்தி சுமார் 1 மணி நேரம் பேசினார். 3 மணி நேரம் விவாதம் நடந்தது! தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு மேயர் பதிலளித்தார்.

திரு. துரையப்பா பேசும்போது. துரையப்பா மேயராக வரபோகிறார் என்று கூறி பலர் மேயராக வந்துவிட்டார்களென்றும் இம்முறை அப்படி நடக்காதென்றும் தன்னல் தான் ஒருவர் மேயராக வருவாரென்றும் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் மேயராக வரமாட்டார் என்றும் கூறினார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தவர்கள்: திருவாளர்கள்: தம்பு கந்தையா. கே வி தெய்வேந்திரன், கே எஸ் நடராசா, எம் ஜி பஸீர், எம் ஏ சி எஸ் ஏ காதர், அல்பிரட் துரையப்பா, எஸ் ஜே அன்ரனி, ஏ விஸ்வநாதன், எம் மார்க்கண்டு, எம் எஸ் பேரின்பநாயகம், எஸ் ஜே வீரசிங்கம், திருமதி ஏ சுவமிநாதர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் திருவாளர்கள்: ரி எஸ் துரைராஜா, ஏ துரைராஜசிங்கம், எஸ் நாகராசா, ரி கே ராஜரத்தினம், என் அந்தோனிப்பிள்ளை, ஏ நடராசா, டாக்டர் ஏபிரகாம்.

நடுநிலைமை வகித்தவர்கள் திருவாளர்கள் ஏ போல்ராஜ், என் ரி செல்லத்துரை. நேற்று நடந்த கூட்டத்திற்கு திரு. சிவசுப்பிரமணியம் வரவில்லை

நம்பிகையில்லாத் தீர்மானம் நிறைவேறியது என கமிஷனர் கூறினார்.

### பாலச்சந்தர் இன்று வருகிறர்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழகத்தின் பிரபல வீணை வித்துவானும், திரைப்பட டைரக்டருமான திரு. எஸ். பாலசந்தர் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகிறார். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை மாலை நடக்கும்செல்வி சிவசக்தி சிவசுப்பிரமணியம் பிள்ளையின் பரத நாட்டிய அரங்கேற்ற மொன்றிக் கலந்துகொள்வதற்காகவே அவர் வருகிறார்.

இன்று பகல் 12-10 மணியளவில் பலாலி விமான நிலையம் வந்துசேருவார் பாலச்சந்தர். ......

### அபிஷேக ஆராதனை

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலின் திருக்குளத்துக்குத்தென்பாலமைக்கப்பட்ட மண்டபத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பழனியாண்டவர் வரும் புதன் கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதனைகள் நடைபெறும். அடுத்தமாதம் 9-ம் திகதி பால்காவடி, விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும். ......

நல்லூர்

### ஸ்ரீ தியாகராஜ உற்சவம் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் இன்று தொடக்கம் அடுத்த மாதம் 2ந் திகதிவரை யாழ்ப்பாணம் வடஇலங்கை சங்கீத சபை நடாத்தும் ஸ்ரீ தியாகராஜ உற்சவத்தின் இன்றைய நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:-

பிற்பகல் 5-30 மணி பஞ்சாபிகேசன் குழுவினர் நாதஸ்வரம் 6-30க்கு செல்வி நவமணி நாகலிங்கம் பாட்டு, இரவு 7-15க்கு திருமதி ஜெயலட்சுமி நடராஜமூர்த்தி பாட்டு. 8-00 மணி திருமதி உவை தணிகாசலம் வீணை, 8-45மணி எஸ். கணபதிப்பிள்ளை பாட்டு, 9-30 மணி-ரி ராஜலிங்கம் பாட்டு

செல்வி ரி. சுப்பையா. கே சித்திவிநாயகம் ஆகியோர் வயலினும், பி. சின்னராசா பிரமச்சானந்தசர்மா, எம். என். செல்லத்துரை ஆகியோர் மிருதங்கமும் வாசிப்பார்கள்.

சேமமடு கொலை வழக்கு

### 'இறந்தவருக்கு அடித்ததை நான் காணவில்லை'

யாழ்ப்பாணம் திங்கள்

திடீரென ஒரு சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன் இறந்தவர் நிலத்தில் கிடந்தார் இறந்தவருக்கு அடிவிழுந்ததை நான் கண்ணுல் காணவில்லை. அவர் எப்படி விழுந்தார் என்று தெரியவில்லை. இறந்தவரை எவரும் அடித்ததை நான் காணவில்லை.

சேமமடு கொலை வழக்கில் எதிரிகளின் வழக்கறிஞர் கே வி எஸ் சண்முகநாதன் குறுக்குவிசாரணை செய்கையில், சாட்சியமளித்த பியசேன மேற்கண்டவாறு கூறினார். இவ் வழக்கு வட பகுதி அசைஸ் கோட்டில் நீதியரசர் வீரமந்திரி முன்னிலையில் நேற்று மூன்றுவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் சேமமடுவில் 69ம் ஆண்டு மேமாதம் 15ம் தேதி நடராசா, யோகராசா ஆகியோர் ரி. காசிப்பிள்ளையை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகளின் வழக்கறிஞர் கே வி எஸ் சண்முகநாதன் சாட்சியமளித்த பியசேனவை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: எதிரிகளை பின் பக்கமாக பார்த்தீரா?- கன்னப் பக்கமாக பார்த்தேன்.

வழ: சம்பவம் திடீரென நடந்தது?-ஆம்

வழ: ஓடிவந்து அடித்தார்கள்?-ஆம்

வழ: நீர் குளறவில்லை?-இல்லை.

வழ: இறந்தவர் குளறவில்லை?-இல்லை

வழ: நீர் பயத்தால் குளறவில்லை?-ஆம்.

வழ: நீர் ஓடி விட்டீர்?-ஆம், நான் திரும்பப்பார்த்தேன் இராசையாவை காணவில்லை நான் ஓடி விட்டேன்,

வழ: நீர் ஓடும்வரை குளறவில்லை?-இல்லை.

வழ: யோகராசவும் மற்றவரும் அடித்துவிட்டதாக குளறினீரா?-இல்லை.

வழ: நீரும் இராசையாவும் அன்றிரவு ஒளித்திருந்தீர்கள்?-இல்லை

வழ: ஜெயராசா சிங்கம், தம்பையா சொன்னபடி எதிரிகள் மீது குற்றம் சுமத்தினீரா?- இல்லை எனக்கு ஒன்றும் சொல்லித்தரவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் வைமன் கோவில் வீதி 4/68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ந் திகதி வெளியிடப்பட்டது.

# மாறு வேடத்தில் 'அபின்' வேட்டை!

மாவிட்டபுரம், ஞாயிறு

வியாபாரிபோல் வேடம் தரித்துச்சென்ற பொலிசார் பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான அபின் போதைப் பொருளை கைபற்றினார்களாம்.

சுழிபுரத்திலும் காரைநகரிலும் இந்த அபின்வேட்டை நடைபெற்றதாகத்தெரிகின்றது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. ஜேக்கப், பட்டு வேட்டி கட்டிக்கொண்டு பெரிய வியாபாரி போலவும் சப்இன்ஸ்பெக்டர் பெர்னண்டோ, பட்டிக்கமன ஆகியோர் அவரது பாதுகாவலர் போலவும் வேடம் தாங்கி தரகர்மூலம் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு சென்று தாம் கொழும்பிலிருந்து இங்கு அபின் வாங்குவதற்காக வந்த வியாபாரிகள் எனக் கூறியதாகவும் இதை நம்பிய வீட்டுக்காரர் கதவுகளைப் பூட்டி பாதுகாப்பாக இருந்த 4 றாத்தல் அபினை இவர்களிடம் கொடுத்ததாகவும் தெரிகிறது. வேறு எங்கே அபின் வாங்கலாம் என்று அவர்கள் கேட்டதின் பேரில் ஒரு தரகர் மூலம் காரைநகரிலுள்ள வீடொன்றுக்குச்சென்றனராம். அங்கு வீட்டுக்காரருடன் வியாபாரியான பொலிஸ் அதிகாரி கதைக்கும்சமயம் மற்றப் பொலிஸ்காரர் தமது காருக்கு வந்து பொலிஸ்உடுப்பை அணிந்துகொண்டனராம்

இச்சமயம் பொலிஸ் அதிகாரி வாங்கிய அபினைக் கொண்டு பிரஸ்தாப நபர்களையும் கூட்டிக்கொண்டு காருக்கு வந்ததும் அங்கு பொலிஸ் உடுப்புடன் வியாபாரியின் காவலர்கள் மாறியிருப்பதைக்கண்ட சந்தேக நபர்கள் ஓட்டம்பிடிக்க முயன்றனராம். அச்சமயம் பொலிஸ் அதிகாரி சாதுரியமாக நால்வரையும் காரில் ஏற்றிக் கொண்டதாகவும் தெரியவருகிறது

இதுகுறித்து தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

— —

### மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஏழாலை, சுவர்ணம் பிரமேச அம்பலவாணேஸ்வரர் கோவில் புனராவர்த்தன சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் வருகிற புதனகிழமை (10-4-71) சிறப்பாக நடைபெற விருக்கிறது. இம் மகா கும்பாபிஷேகத்தின் கிரியாகாரியங்களை பிரதம பிரதிஷ்டா குருவாக பிரமஸ்ரீ சி, சர்வேஸ்வரக்குருக்கள் நடாத்தி வைப்பார். இக் கிரியை வைபவங்களில் ஆறு குருக்கள்மார் பங்கு பற்றுகின்றனர்.

### பஜனை

ஊரதீவு, ஞாயிறு

புங்குடுதீவு- மடத்திவெளி ஸ்ரீபாலசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தின் தேர்த் திருவிழா நடைபெற்ற தினத்தன்று ஊரதீவு திருவள்ளுவர் பாலர் கழகத்தினர், புங்குடுதீவு பாணவிடைச் சிவன் ஆலயத்திலிருந்து செல்வன் சி. சசிகாந்தன் தலைமையில் நடைபஜனை ஒன்றை மேற்கொண்டு மேற்படி ஆலயத்துக்குச் சென்று பஜனைசெய்தனர்

### பாக் குற்றச்...

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

யின் பிரகாரம் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் மனிதாபிமானமற்ற கொடுமைகளைத் தடுத்து நிறுத்தும்படி கோரி பொதுக் காரியதரிசி உதாண்டிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக ஐ நா உயர் தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

#### இந்தியா மறுப்பு

இந்திய அரசுப பத்திரிகைகளும், வானொலியும் பாகிஸ்தான் உள்நாட்டுவிவகாரங்களில் தலையிடுவதாக சாட்டப்பட்ட குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது. புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் திரு ஹுதரை அழைத்து அவரிடம் இந்திய வெளிவிவகார இணைக்காரியதரிசி, அசோக்ரேய் இந்தியாவின் மறுப்பைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில், ஆட்சிமன்றத்தில் இந்தியாவினுல் வெளியிடப்பட்ட அறிக்கை மிகவும் கவனமாகப் பரிசிலனை செய்யப்பட்ட பின்பே வெளியிடப்பட்டது. ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு சுதந்திரம் உண்டு. அதையாரும்தடுக்கமுடியாது இந்தியாவில் பத்திரிகைகளும், வானொலிகளும் சுதந்திரமாக இயங்குவதால் அதற்கு எவ்வித தடையும் விதிக்கமுடியாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும். கக்குலி ஆற்றுப் பகுதியில் இந்தியக்கப்பலில் வைத்து இரகசிய வானொலி ஒன்று இயங்குவதாக பாகிஸ்தானினுல் வெளியிடப்பட்ட செய்தியையும் இந்திய அரசு மறுத்துள்ளது. இந்தியப் பிரதேசத்தில் இப்படிப்பட்ட செயல் நடைபெறுவதை இந்தியா எப்பொழுதும் ஏற்றுக்கொண்டதில்லை எனத் தெரிவித்தார்.

#### செஞ்சிலு வைச் சங்கம் விஜயம்

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் அழிவை மதிப்பிட்டு கருணை உதவி அளிப்பதற்காக 4 அங்கத்தவர்களைக்கொண்ட உயர் குழுஒன்று கிழக்குப்பாகிஸ்தானுக்கு விஜயம்செய்துள்ளது. ஜெனிவாவில் இயங்கும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கதலைமையகம்இந்த உயர்தரக்குழுவை அனுப்பிவைத்துள்ளது.

### 'திறந்த கல்லறை'

யாழ்ப்பாணம், திங்கள்

பதினறு வருடங்களுக்கு முன்னர் லண்டன் பி பி சி. வானொலியில் ஒலிபரப்பப்பட்ட 'தி விக்கில்' என்ற பிரபல நாடகத்தைத் தமிழில் தழுவி எழுதிய 'திறந்த கல்லறை' என்ற நாடகம் அடுத்த மாதம் 1-ம் திகதி 6-30 மணிக்கு யாழ். வீரசிங்கம்மண்டபத்தில்மேடையேற்றப்படவுள்ளது. திரு. எம். எஸ். ரத்தினம், எஸ். ரி. ரத்தினம், ஜே வி. ரத்தினம் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org